Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (07.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 038

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## தரமான ஐஸ்கிறீம் உற்பத்தியை தொடர அனுமதியுங்கள்

### அமைச்சர் டக்ளஸிடம் கோரிக்கை





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தரமானஐஸ்கிறீம் உற்பத்தியை மேற்கொள்ள அனுமதியளிக்கும் படி அமைச்சர் டக்ளஸிடம் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கைக்கு பதிலளிக்கும் போது,உங்கள் கோரிக்கையில் நியாயமும், உற்பத்தி நிலையங்களின் சுகாதார நடைமுறைகளில் முறையான நேர்த்தியும் இருக்குமாக இருந்தால் உங்கள் கோரிக்கைகள் தொடர்பாக நிச்சயம் கவனம் செலுததப்படும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த; நீதிமன்ற முடிவு திங்கள் தெரியும்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியுமா இன்றேல் முடியாதா என்பது தொடர்பிலான வியாக்கியானம் உயர் நீதிமன்றத்தால், எதிர்வரும் திங்கட்கிழமை் அனுப்பிவைக்கப்படவுள்ளது.

அரசியலமைப்பின் 18ஆவது திருத்தத்தின் பிரகாரம் மற்றுமொரு தடவை தேர்தலில் போட்டியிடுவதற்கு இடையூறு இருக்

19 ஆம் பக்கம் பார்க்க

## கொஸ்லாந்தை சடலங்கள் மீது டி.என்.ஏ. சோதனை

கொஸ்லாந்தை மீரியபெத்த மண்சரிவில் மீட்கப்பட்ட சடலங்களில் அடையாளம் காணப்படாத சடலங்களை டி.என்.ஏ (DNA) பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவிலிருந்து மீட்கப்பட்ட அனைத்து உடல்களும் அடையாளம் காண்பதே டீ.என்.ஏ பரிசோதனை முன்னெடுக்கப்படுவதன் நோக்கமென பொலிஸ ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடக்வியலா

19 ஆம் பக்கம் பார்க்க

★ கடந்து விட்டது ஒருவருடம் ★ நலச்சேவைகள் எதுவும் இல்லை ★ மக்களுக்கு ஏமாற்றமே மிச்சம்

# பகிரங்க விவாதத்துக்கு வடக்கு முதல்வருக்கு அழைப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த ஒரு வருட காலத்தில் வடக்குமக்களுக்காக மாகாணசபையால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலச் சேவைகள் என்ன? என்பது குறித்து பகிரங்க விவாதத்துக்கு வருமாறு வடமாகாண எதிர்க்கட்சித்தலைவர் சி.தவராசா அழைப்பு விடுத்துள்ளார்.

வடமாகாண சபை நிதி தொடர்பாக அறிவிலித்தனமான விமர்சனங்களை அரசாங்கம் மற்றும் மாகாண சபை எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வருவதாக மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பின் போது கூறியதற்கே வடக்கு மாகாண சபை எதிர்க் கட்சித் தலைவர் சி. தவராசா இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

வடக்கு மாகாண சபை பதவியேற்று ஒரு வருட காலம் முடிவுற்ற நிலையில், இதுவரை மாகாண சபை மக்களுக்கு என்னத்தை செய்துள்ளது என்பது தொடர்பாக மாகாண சபையின் முதலமைச்சரோ, அமைச்சர்களோ அல்லது அவைத் தலைவரோ தொலைக்காட்சியின் முன்பு அல்லது மக்கள் அரங்கொன்றில் நேரடி விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்திரிகையாளர்களை அழைத்து ஒரு பக்கச்சார்பாக பிழையான கருத்துக்களை வெளியிடாமல் நேரடியாக மக்கள் மன்றின் முன் இது தொடர்பான

19 ஆம் பக்கம் பார்க்க

## புலிகள் மீதான தடை நீடிப்பு; இந்திய நீதிமன்ற தீர்ப்பு விரைவில்


இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது. இந்தத் தடையை மத்திய அரசு அவ்வப்போது நீடித்து வருகிறது. இந்தத் தடை சரியா என்பதை விசாரிக்க நீதிபதி ஜி.பி.மிட்டல் தலைமையிலான சட்டவிரோதச் செயல்கள் தடுப்பு தீர்ப்பாயத்துக்கு டில்லி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்தத் தீர்ப்பாயத்தின் இறுதிக்கட்ட விசாரணை நேற்று முன்தினம் டில்லி உச்சநீதிமன்றத்தில் நீதிபதி ஜி.பி.மிட்டல் தலைமையில் நடைபெற்றது.

மத்திய அரசின் சார்பில் சட்டத்தரணி ஜெனரல்

19 ஆம் பக்கம் பார்க்க

## முள்ளிக்குளத்தில் மீள் குடியமர்வு; கோத்தாபயவுடன் ஆராய்வு



மன்னாரில் உள்ள முள்ளிக்குளம் பகுதியில் மக்களை மீள் குடியேற்றுவது தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கும் மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப்புக்

19 ஆம் பக்கம் பார்க்க

## பாம்பு தீண்டி பொலிஸார் பலி

அனுராதபுரம் நீதிமன்ற வளாகத்தில் பணியாற்றி வந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் பாம்பு தீண்டியதில் உயிரிழந்துள்ளார்.

அனுராதபுரம் விஹாரபாலுகம பிரதேசத்தை சேர்ந்த 35 வயதான பொலிஸ் உத்தியோகஸ்தரே இவ்வாறு பாம்பு தீண்டி இறந்துள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோரை இழந்த மாணவர்களுக்கு இந்தியாவில் உயர் கல்வி

மண்சரிவு அனர்த்தம்

கொஸ்லாந்தை மீரியபெத்த தோட்ட மண்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய வம்சாவளிகள் என்ற அடிப்படையில் உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக இந்திய கண்டி உதவி உயர்ஸ்தானிகர் ஏ.நடராஜன் தெரிவித்துள்ளார்.

மீரியாபெத்த அனர்த்த இடத்துக்கு நேற்று விஜயம் செய்த அவர் அங்குள்ள மக்களை கண்டு ஆறுதல் கூறினார்.

அத்துடன் பதுளை மாவட்ட அரசாங்க அதிபருடன் அவர் நிலைமைகளை ஆராய்ந்தார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த அவர் மண்சரிவின் பின்னர் அயல்நாட்டு உதவிகள்

19 ஆம் பக்கம் பார்க்க



# நான் தவிசாளர் என்னைத் தடுக்க முடியாது

## வலி.வடக்கில் பரபரப்பு

(வலி.வடக்கு)

நான் தவிசாளர் என்னை எவரும் தடுக்க முடியாது, நான் நினைத்ததைச் செய்து முடிப்பேன்.

இவ்வாறு வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபைக் குட்பட்ட சபை நிதியில் வீதி மீள் புனரமைப்புப் பணி இடம் பெற்று வருகின்றது.

இவ்வீதி புனரமைப்பில் பாரம் குறைந்த றோலர் பாவிப்பதனை இடைநிறுத்துமாறு வலி. வடக்கு பிரதேசசபை ஈ.பி.டி.பி. யின் உறுப்பினரும், தொழில்நுட்பக் குழுத்தலைவருமான ப.உதய குமார் தவிசாளரின் கவனத்திற்கு அவசரமாகக் கொண்டு வந்தார்.

இவ்வேளையில் தவிசாளர் சுகிர்தன் தரங்குறைந்த வார்த்தைகளைப் பிரயோகித்து என்னை எவரும் தடுக்க முடியாது என வீறாப்புடன் ஈ.பி.டி.பி.யின் எதிர்க் கட்சி உறுப்பினரை தவிசாளர் பலர் முன்னிலையில் தாக்க முற்பட்டார்.

உடன் இச்சம்பவம் யாழ்ப்பாணப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜக்சீலின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதனையடுத்த உதவி ஆணையாளர் மேற்படி றோலர் பாவிப்பதனை உடன் இடை நிறுத்துமாறு தடை உத்தரவிட்டார்.

மேற்படி சம்பவம் நேற்று வலி.வடக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதாக சபை அலுவலர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

## வயோதிபப் பெண் தூக்கிட்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் மேற்கு, கந்தசுவாமி கோவில் பகுதியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் வயோதிபப் பெண் ஒருவரது சடலம் நேற்று சுன்னாகம் பொலிஸாரினால் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


அதே இடத்தைச் சேர்ந்த மார்க்கண்டு சரஸ்வதி (வயது-85) என்ற வயோதிபப் பெண்ணே இவ்வாறு தூக்கிட்டு உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் பிற்பகல் 6.00 மணியில் இருந்து இவர் வீட்டில் இல்லாததினால் இவரைத் தேடிய போது நேற்றுக் காலை வீட்டின் பின்புறமாக தூக்கில் தொங்கிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்த சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்த மல்லாகம் நீதவான் சடலத்தையும், சம்பவ இடத்தையும் பார்வையிட்டதைத் தொடர்ந்து பொலிஸாரினால் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (பா)

# வறுமைப்பட்ட 100 பயனாளிகளுக்கு பயன்தரு பசுமாடுகள் வழங்கப்பட்டன

## இந்து-பௌத்த சங்கம் முன்மாதிரி



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு நேற்று யாழ்.பொதுசன நூலகத்திற்கு அருகே அமைந்துள்ள திறந்த வெளி அரங்கில் வைத்து பசுமாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்து-பௌத்த சங்கத்தின் ஏற்பாட்டில் பல் உற்பத்தியை அதிகரிக்கும நோக்கில் யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு இந்தப் பசுமாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்த நிகழ்வில், பெருமளவு பயனாளிகள் தமக்கு வழங்கப்பட்ட மாடுகளை வாகனங்களில் ஏற்றி தமது இடங்களுக்கு எடுத்துச் சென்றதை அவதானிக்க முடிந்தது. (பா, 05)

## நவாலி நூலகத்தில் பத்திரிகைகளின் தொகுப்பு

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நூலகத்தில் கடந்த கால வரலாறுகளை ஆய்வு செய்வோர் நூலகத்தைப் பயன்படுத்தி ஆய்வு செய்ய முடியும்.

இவ்வாறு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நூலகமும்-சனசமூக நிலைய நூலகர் சி.தேவராசா தெரிவித்தார்.

1995 இல் இருந்து பல்வேறு பத்திரிகைகள் தொகுக்கப்பட்டு வாசகர்கள், ஆய்வாளர்களின் நன்மை கருதி ஒழுங்குபடுத்தி வைக்கப்பட்டுள்ளதாக நூலகர் மேலும் தெரிவித்தார்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சீமாட்டி லீலாவதி நினைவுப் பேருரை

**வட இலங்கைப் பண்பாட்டுத் தளத்தின் உருவாக்கமும் உருவாக்கியவர்களும் - தொல்லியல் மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விளக்கம்**

பேருரை வழங்குனர் : பேராசிரியர். செல்லையா கிருஸ்ணராஜா, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இடம் : கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி : 13.11.2014

நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(C/3593)

பதிவாளர்


# ஒழுங்கற்ற பஸ்சேவை; பயணிகள் பெரும் சிரமம்

(அச்சுவேலி)

பருத்தித்துறை– யாழ்ப்பாணம் வழித்தட சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகளின் ஒழுங்கற்ற சேவையால் பல பயணிகளும், மாணவர்களும் பாதிக்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பருத்தித்துறை, யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபடும் 750 இலக்க பேருந்தானது தினமும் காலை 9.00 மணிக்கு அச்சுவேலி பேருந்து தரிப்பிடத்திற்கு வருகை தருவதுடன், 9.30 மணிக்கும் ஒரு பேருந்து வழமையாக வருகை தருவது வழமை.

காலை 9.00 மணிக்கு அச்சுவேலி பேருந்து தரிப்பிடத்திற்கு வரும் பேருந்து சில தினங்களாக வராமையால் தாம் 9.30 மணிக்கு வரும் பேருந்தில் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

இதனால் தமது பணியிடங்களுக்கும் மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் செல்வோர் முழுமையாகப் பாதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சேவை இடம்பெறும் 751 இலக்கப் பேருந்தானது முன்னர் 8.45 மணிக்கும் 9.00 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் தம்பாலைச் சந்திக்கு வருகை தருவது வழமை.

அச்சேவையும் தற்போதும் இடம்பெறாமையால் தாம் பல்வேறு சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப் படுகிறது.

அத்துடன் சேவை நேரங்களில் மாற்றம் ஏற்படுத்தப் பட்டிருந்தால் தமக்கு பத்திரிகை வாயிலாக அறிவித்தல் தர வேண்டும் எனவும் பயணிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது. (85)

## மண் சரிவு பாதித்த மக்களுக்கு வணிகர் கழகம் உதவி

பதுளை, மீரியபெலவத்த மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு யாழ்.வணிகர் கழகத்தினால் யாழ்ப்பாண வர்த்தகர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஒரு தொகுதி உடுபுடவைகள் மற்றும் உலர் உணவுப் பொதிகள் என்பவற்றை வடமாகாண சபை விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரன், செயலாளர் இ.ஜனக்குமார் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் கேசவன் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர்.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## சேர்.பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை

**சோழர் காலத்து இடையர் சமூகம் : கோவில் கலாசாரத்தின் புறநிலை தொண்டர்கள்**

பேருரை வழங்குனர் : பேராசிரியர். மகேஸ்வரன், தலைவர், தமிழ்த்துறை பேராதனைப் பல்கலைக்கழகம்

இடம் : கைலாசபதி கலையரங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

திகதி : 12.11.2014

நேரம் : பிற்பகல் 3.00 மணி

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்

(C/3592)


## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஆங்கிலம் படிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்.கிளை குடாநாட்டு மாணவர்களின் நன்மை கருதி ஆங்கில வகுப்புகளை நடாத்த தீர்மானித்துள்ளது. அத்துடன் சிறுவர்களுக்கு கதை சொல்லும் நேரம் என்னும் நிகழ்ச்சியையும் யாழ்.பொதுசன நூலக சிறுவர் பகுதியில் ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கதை சொல்லும் நேரம் நிகழ்ச்சி எதிர்வரும் 8, 29 ஆம் திகதிகளில் முற்பகல் 10.00 மணி முதல் 11.30 வரை நடைபெறவுள்ளது.

ஆங்கில வகுப்புகள் பிரிட்டிஷ் கவுன்சில் யாழ்.கிளையில் இன்றும் எதிர்வரும் 14, 29 மற்றும் எதிர்வரும் மார்கழி மாதம் 5 ஆம் திகதிகளில் மாலை 4.00 மணி முதல் 5.30 வரை நடைபெறவுள்ளன. இந்த வகுப்புகளுக்கு 250 ரூபா கட்டணமாக அறவிடப்படும். சொற்கள், வாக்கிய அமைப்பு, இலக்கணம், செம்மையான ஆங்கிலப் பிரயோகம், உச்சரிப்பு ஆகிய தலைப்புகளில் வகுப்புகள் நடைபெறவுள்ளன. 0217521521 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாமென பிரிட்டிஷ் கவுன்சில் அறிவித்துள்ளது.


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் றீசைக்கிள் (மீள்சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(இலுப்பையடிச் சந்தி அருகாமை)

021 222 8680, 077 592 5088.

(C/3800)

# வடமாகாண மதுவரி திணைக்களத்துக்கு 29 உத்தியோகஸ்தர்கள் நியமனம்



(யாழ்ப்பாணம்)

மதுவரித் திணைக்களத்தின் வட மாகாண அலுவலகங்களில் கடமையாற்றுவதற்காக 29 புதிய உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அரியாலை, புங்கன்குளம் சனசமூக நிலைய மைதானத்தில் வைத்து நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டன.

மதுவரித் திணைக்களத்தின் 3 பெண் பாதுகாவலர், 18 ஆண் பாதுகாவலர் மற்றும் 8 மதுவரி பரிசோதகர்கள் ஆகியோருக்கான நியமனங்களே வழங்கப்பட்டன.

இவர்கள் தங்கள் பயிற்சிகளை முடித்து அணிவகுப்பு மரியாதையை மதுவரி திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்புஆராய்ச்சிக்கு செலுத்தி தங்கள் பதவிகளை பொறுப்பேற்றுக்கொண்டனர்.

அத்துடன், பயிற்சியின் போது சிறந்த திறன்களை வெளிப்படுத்திய அலுவலர்களிற்கான வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், மதுவரி திணைக்கள ஆணையாளர் வசந்த ஹப்பு ஆராய்ச்சி, மதுவரித் திணைக்கள மல்லவ குற்றப்பிரிவு ஆணையாளர் என்.விதானகே, பிரதி ஆணையாளர் வசந்த சமரகே, யாழ். மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# தொலைத் தொடர்பு நிலையம் உடைக்கப்பட்டு திருட்டு

## சந்தேகத்தில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையம் ஒன்றை உடைத்து அங்குள்ள பொருட்களை திருடிய இருவரை கைதுசெய்துள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் எஸ்.பி.ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் - வவுனியா, இலுப்பையடியில் உள்ள தொலைத் தொடர்பு நிலையம் ஒன்று கடந்த வாரம் உடைக்கப்பட்டு அங்கிருந்த ஐபாட், தொலைபேசிகள், கெற்போன்கள், சார்ஜர்கள், என இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் 17 வயதுடைய இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டதுடன் அவர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதாற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சப் இன்ஸ்பெக்டர் எஸ்.பி.ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை மற்றும் வவுனியா, தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரயில் பாதைக்கு அருகிலுள்ள வீதிகள் ஒடுங்கியுள்ளதால் போக்குவரத்தில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுப் பகுதியில் உள்ள புகையிரதப் பாதைகள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள நிலையில் புகையிரதப் பாதைகளுக்கு அருகிலுள்ள வீதிகள் ஒடுக்கப்பட்டுள்ளதாகவும், இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் தமது மோட்டார் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இன்னல்களை எதிர் நோக்கி வருவதாகவும் விசனம் தெரிவித்துள்ளனர்.

அது மட்டுமன்றி வலிகாமம் மக்களின் பிரதான போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான புகையிரதப் பாதைகளுக்கு அருகிலுள்ள வீதி தற்போது ஒடுக்கப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் உள்ளதாக தெரிவிக்கும் அப் பகுதி மக்கள் தற்போது இவ் வீதியானது மண் திட்டுக்களாகவும், குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் இதனால் தாம் பெரும் இன்னல்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் இப்பாதையின் சீரற்ற நிலையினால் அவ்வீதியூடாக பயணங்களை மேற்கொள்ள முடியாத மக்கள் நீண்ட தூரம் சுற்றியே தமது பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவித்துள்ளதுடன் பொதுமக்களினதும் வியாபாரிகளினதும் சிரமத்தை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்துவார்களா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (66)

# சங்காபிஷேகம்

(அச்சுவேலி)

அச்சுவேலி இடைக்காடு கொட்டடி வைரவர் ஆலய சங்காபிஷேகம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. நயினை நாகபூஷணி அம்மன் ஆலய குருக்களின் புதல்வர்கள் மற்றும் பேரப்பிள்ளைகள் இணைந்து இந்த கும்பாபிஷேக கிரியைகளை நடாத்தினர். அத்துடன் அன்றிரவு வைரவப் பெருமானின் வெளி வீதி உலாவும் இடம்பெற்றது. (85)

# வன்னியில காணி உரிமத்துக்கு தடையாய் நிக்கிறது நீங்களெல்லே..?




மலையகத்தில் கடந்தவாரம் நடந்த மண்சரிவினால் பலியான சனங்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உலகெங்கும் இருந்தும் அனுதாபங்கள் தெரிவிக்கப்பட்டமை நல்லதொரு விசயம்.

அனுதாபத்தோட மட்டும் நிற்காமல், உலகத்தின் மனச்சாட்சி உதவிக்கரமாக நீண்டது இன்னும் முக்கியமானது.

உள்நாட்டிலும் மலையகத்தின்ர துயரம் அனைத்து மட்டங்களிலும் எதிரொலித்திருக்கு.

இனமத மொழி பிரதேச வேறுபாடுகளைக் கடந்து எல்லோரும் மலையக மண்சரிவின் பாதிப்பையிட்டு கவலை கொண்டிருந்திருக்கின்றனர்.

இந்தப் பாதிப்பைச் சந்தித்த மக்களுக்கு உதவுவதற்கும் எல்லாரும் முன்வந்திருக்கினம்.

இதெல்லாம் வரவேற்க வேண்டிய சங்கதிகள். நல்ல விசயங்கள்.

ஆனால், இந்த இழப்பிலும், அவலத்திலும் கூட அவரவர் அரசியல் செய்ய வெளிக்கிட்டதுதான் கேவலம்.

முதலில், இந்த அவலத்துக்குக் காரணமாக இருந்தது இரண்டு தரப்பு. ஒண்டு, மலையகத்தின் தமிழ் அரசியல் தரப்புக்கள்.

இதுவரை இந்தச் சனங்களை வைச்சுப் பிழைச்ச அளவுக்கு இந்தச் சனங்களுக்கு உருப்படியாக எதையும் செய்யவில்லை.

மலையக மக்களுக்கு எண்டு ஒரு தனி அடையாளத்தை அமைச்சர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஏற்படுத்தினார்.

மலையக இளைஞர்கள் சுய நம்பிக்கையுடன் மேலெழுவதற்கு வித்திட்டார்.

யாழ்ப்பாணத்தவரே வாத்திமாராகவும், தோட்ட அதிகாரிகளாகவும் பிற காரியங்களில் எல்லாம் மேலாண்மை எண்டிருந்த நிலைமையை மாற்றினார் எண்டதெல்லாம் உண்மை.

ஆனால், மலையக மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கோ அவர்களுக்கான காணிப்பிரச்சினைக்கோ இவர் ஒரு நியாயமான தீர்வைக் காணவில்லை.

அமைச்சர் தொண்டமானுக்குப் பின்வந்த அவருடைய வழித்தோன்றல்களும் கூட இந்தச் சனங்களின்ரை நியாயமான பிரச்சினைகளைத் தீர்த்ததாக இல்லை.

இதுதான் நடந்த மண்சரிவால் பேரழிவையும் அவலத்தையும் உண்டாக்கியது.

பி.பி.ஸி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானைப் பேட்டுக் கிழித்ததும் இந்தத் தவற்றின் காரணமாகத்தான்.

அடுத்த தவறு அரசாங்கத்தின் பக்கம் என்று சொல்லப்படுது.

இதை ஏற்றுக் கொள்ளத்தான் வேணும்.

100 ஆண்டுகளுக்கும் மேலாக லயன் எண்ட புறாக்கூடுகளில் வாழ முடியாமல் அவதிப்படுகிற சனங்களுக்கு வழிகாட்ட முடியாமல் வாழ்வளிக்க முடியாமல் அப்படியே இருக்க விட்ட அரசாங்கம் பொறுப்பில் இருந்து தப்ப முடியாது.

இந்தத் தவறும், பொறுப்பும் இந்த அரசாங்கத்திற்கு மட்டும் தான் எண்டில்லை.

இதுக்கு முந்தி ஆட்சியில் இருந்தவைக்கும் உண்டு.

சரி இதெல்லாம் ஒருபக்கம் இருக்க, இப்ப நடந்த மண்சரிவு அவலத்தை வைச்சுக்கொண்டு, ஆளுக்காள் அரசியல் நடத்திறதைப் பார்ப்பம்.

வடக்கு மாகாணசபை ஒருபக்கத்தால நிவாரணப் பொருட்களைச் சேர்த்தது.

மலையக மக்களின் பாதிப்புக்கு யாரும் உதவலாம். உதவ வேணும் எண்டது சரி.

ஆனால், இதைவைச்சு நீலிக்கண்ணீர் வடிக்கிறதுதான் பிழையான காரியம்.

மலையகத்தில் காணிப்பிரச்சினையை முறையாகத் தீர்த்திருந்தால் அவலத்தில் பாதியைக் குறைத்திருக்கலாம் எண்டு சொல்லியிருக்கிறார் முதலமைச்சர் விக்கினேஸ்வரன்.

ஐயா, வன்னியில 5000க்கு மேற்பட்ட குடும்பங்கள் காணிக்கான உரிமம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

காணிக்கான உரிமம் இல்லாத காரணத்தினால் வீடுத்திட்டம் கிடைக்காமல் இருக்கிறார்கள்.

இந்தக் காணிக்கான உரிமத்தை பெற்றுக்குடுக்கிறதுக்கு சுமந்திரனும், சம்பந்தனும் தடையாக இருக்கினம்.

இதையெல்லாம் தெரிஞ்சுகொண்டு நீங்கள் வாயைத் திறக்காமல், மனதைத் திறக்காமல் இருக்கிறியள்.

இதில் நாலின் மூன்று பங்கினர் மலையகத்திலிருந்து வந்து குடியேறிய சனங்கள்.

இதுக்கொரு நீதியான தீர்வை வழங்கிறதைப்பற்றி நீங்கள் இன்னும் யோசிக்கேல்ல.

பிரதம நீதியரசர் எண்ட வகையிலும் நீங்கள் இதுக்குத் தீர்ப்புச் சொல்ல வேணும்.

முதலமைச்சர் எண்ட வகையிலயும் இதுக்கு நியாயம் வழங்க வேணும்.

இதைப்போலத்தான் ஒரு பாதி அரசியல் வாதியும் பாதி ஊடகக்காரரும் இந்த அவலத்தை விற்றுப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்தார்.

இதையெல்லாம் பார்க்க அருவெறுப்பாகத்தானிருக்கு.

ஒரு காலம் சவப்பெட்டி அரசியலுக்கு உதவியது.

இப்போது கண்ணீரும் அவலமும் பயன்படுகுது.

உழைப்பவனின் காலம் பொன் ஆகுகிறது. உழைக்காதவனின் பொன் காலமாகுகிறது. - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
, தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

# மாற்று அரசியல் எது?

இலங்கையிலுள்ள தமிழர்கள் தங்களுக்கெனக் கோரும் அரசியலுரிமைகளைப் பெறுவதற்காக இதுகாலவரை செய்துவந்த எதிர்ப்பரசியலின் மூலமாக எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது உண்மை. அழிவுகளும் அவலங்களும்தான் எமது மக்களுக்குத் தொடர்ச்சியாக இருந்திருக்கிறது.

நமது எதிர்ப்பரசியல் விளைவித்த கொடுமையின் உச்சம் முள்ளிவாய்க்காலாக அமைந்தது. அதற்கு அரசை மட்டுமே ஒரே குற்றவாளியாக இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருப்பது, நாம் நம்மைச் சுயவிமர்சனம் செய்துகொள்ளக் கள்ளப்படுகிறோம் –நம்மை மாற்றிக்கொள்ள விருப்பப்படவில்லை என்றே பொருள்.

எதிர்ப்பரசியலின் தோல்வியை விளங்கிக்கொள்ள மறுப்பவரகளால், புதிய அணுகுமுறை ஒன்றைச் சிந்திப்பதற்கு இயலாது. அவர்கள், நாம் செய்து பார்த்துத் தோற்றுப்போய்விட்ட அதே எதிர்ப்பரசியலையே, இனி வெளிச்சக்திகள் உதவுமென்றால் செய்யக் காத்திருப்பர்.

நமது தோல்விக்கு நம்மிடமிருந்த எந்தப் பிழையும் காரணமல்ல என்று நம்பும் ஒருவர், நமது அதே எதிர்ப்புக்கு உதவ பூகோள அரசியலில் புதிய சிற்றசைவுகள் தென்படுகிறதா என்றுதான் பார்த்திருக்க வேண்டியிருக்கும். தொடர்ந்தும் அவர் மற்றவர்களைத்தான் திருத்தியாக வேண்டும் என்று முயன்று கொண்டிருப்பார்.

கடந்த அறுபத்தைந்து வருடகால எதிர்ப்பரசியலில் கண்ட இயலாமைதான் நம்மை பகைமறப்பிற்கும் நல்லிணக்கத்திற்கும் தூண்டுகிறது. இணக்க அணுகுமுறைக்கு நாம் மாறுவதென்பது நமது தேவைக்காகத்தான்.

எதிரி இணக்கத்திற்கு முற்படாதபோது நாம் எப்படி இணக்க அரசியலுக்குச் செல்லமுடியும் என்று கேட்பது மீண்டும் எதிர்ப்பரசியலில் தான் நிற்கிறோம் என்பதே தவிர அது இணக்க அணுகுமுறைக்குரியதல்ல.

எதிர்த்தரப்பினர் வன்முறையை பிரயோகித்தாலும் பதிலுக்கு வன்முறையைப் பிரயோகிக்காமல் இருப்பதுதானே அகிம்சையின் வழிமுறை? அதுபோலத்தான் இணக்கத்தை மறுப்பவர்களிடமேதான் நாம் நமது இணக்க அணுகுமுறைகளைப் பிரயோகப்படுத்த வேண்டும்.

மாறாக, எதிர்ப்பதற்கு உள்நாட்டில் முடியவில்லையென்றால் வெளியுதவிகளை எதிர்பார்ப்பதும், அதை மிரட்டலாகப் பயன்படுத்துவதும் இணக்க அரசியலாகாது.

பிரித்தானியரை எதிர்ப்பதற்கு ஹிட்லரிடம்,இத்தாலியிடம்,ஜப்பானிடம் உதவி கேட்கவெல்லாம் சுபாஷ் சந்திரபோஸ்தான் முயன்றார். காந்தி மக்களையும் அகிம்சையையும்தான் நம்பினார்.

இணக்க அரசியலின் தேவை உணர்ந்தவர்கள் எங்களைத்தான் நம்ப வேண்டும். எங்களது கோரிக்கைகள் ஏனைய சமூகத்தினருக்கு எதிரானவையல்ல என்று உணர்த்தத் தெரிந்திருக்க வேண்டும். நாம் கேட்பது நியாயமானதென்றால் எவராலும் மறுக்க முடியாது என்பதை நிகழ்த்திக் காட்டும் ஓர்மம் வேண்டும்.

அதேசமயம் மக்களில் சிறுபகுதியினர் இணக்கத்தை வெளிப்படுத்திப் பலன் எதிர்பார்க்க முடியாது. பெரும்பான்மைத் தமிழ் மக்கள் எதிர்ப்பரசியலைக் காட்டுகையில், மறுபக்கம் இணக்க அரசியலைச் செய்துகொண்டிருப்பவர்கள் ஏன் சாதிக்கவில்லை என்று கேட்பது முட்டாள்தனம் மட்டுமல்ல அயோக்கியத்தனமுமாம்.

89–ல் வடக்கு கிழக்கு மாகாண சபையை எடுத்தவர்கள் அதைச் செய்ய முடியாமல் போனது உதாரணம். தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவை அந்தத் தீர்வுக்குப் பெற்றுக்கொடுக்கத் தவறிய தமிழர்களின் வரலாற்றுப்பிழைதான் காரணமே ஒழிய, பழியை அரசின் மீது போட்டுவிட்டுத் தமிழர்கள் தப்பியொளிக்க முடியாது.

நாம், நமதுள்ளே இருக்கும் குறைகளை தேடிக் கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது. முதலில் நமக்குள்ளே மண்டிப் போய்க் கிடக்கும் தமிழினவாதச் சிந்தனைகளை நீக்கம் செய்து வெளிவர வேண்டும். - ஆசிரியர்



வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 2014

“உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்”

—— மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# குடாநாட்டில் இழுவைப்படகு தொழில்; எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## யாழ்.கடற்றொழில் பணிப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வரும் மீனவர்களுக்கு எதிராக மிக விரைவில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் நடராசா கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளை பயன்படுத்தி பருத்தித்துறை மீனவர்கள் சிலர் கடந்த ஒருவார காலமாக மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக வல்வெட்டித்துறை மீனவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள பிரதிப்பணிப்பாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடந்த வாரத்தில் பயிற்சிக்காக கம்பஹா சென்றதால் இது தொடர்பாக உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை.

தற்பொழுது அவர்கள் பயிற்சி முடித்து திரும்பியுள்ளனர். ஆகையால் இழுவைப் படகு மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் இனி வரும் நாட்களில் மேற்கொளளப்படும் என்று அவர் கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது 180 வரையான இழுவைப் படகுகள் இருக்கின்றன. அவற்றில் பருத்தித்துறை மீனவர்களிடம் 21 இழுவைப் படகுகள் உள்ளன. இவற்றில், 8 இழுவைப படகுகளின் உரிமையாளர்களே கடந்த ஒரு வாரகாலமாக சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக பிரதிப் பணிப்பாளர் மேலும் கூறினார்.

# வெளிநாடு செல்லும் ஓய்வூதியர்கள் 6 மாதத்திற்கு முன் அறிவிக்கவேண்டும்

## ஓய்வூதியத் திணைக்களம் அறிவுறுத்து

புதிய சட்டதிட்டங்களுக்கு அமைய ஓய்வூதியம் பெறுவோர் வெளிநாடு செல்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அறிவிப்பது கட்டாயமென ஓய்வூதியத் திணைக்களம் அறிவித்துள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் அதிகளவிலான ஓய்வூதியம் பெறுவோர் வெளிநாடுகளுக்குச் செல்வது தொடரபாகவும் வெளிநாடுகளில் வசிப்பது தொடர்பாகவும் எவ்வித தகவல்களையும் திணைககளத்திற்கு வழங்குவதில்லை.

அது தவிர, அவர்கள் ஓய்வூதியம் பெறும் வழிகள் தொடர்பான எவ்வித தகவல்களையும் திணைக்களத்திற்கு அறிவிப்பதில்லை., இதனால் ஓய்வூதியம் வழங்குவதில் சில நடைமுறைச் சிக்கல்களைத் திணைக்களம் எதிர்நோக்குகிறது.

இவற்றைக் கருத்திற்கொண்டு இந்தப் புதிய சட்டதிட்டங்கள் அமுல்படுத்தப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெறுவோரில் 21,600 பேர் 75 வயதிற்கு மேற்பட்டவர்கள். இவர்களில் 6,800 பேர் வெளிநாடுகளில் வசிக்கின்றனர்.

இவ்வாறு வெளிநாடுளில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோரில் 4000 பேர் வரையானோர் ஓய்வூதியத்தை வங்கிகளினூடாகவும் 2,800 பேர் வெளிநாட்டுத் தூதரகங்களினூடாகவும் பெறுவதாக ஓய்வூதியத் திணைக்களத்தின் புதிய ஆய்வுத் தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

# ஆத்ம கௌரவம் இருப்பதால் அரசுடன் இருக்க முடியாது

## என்கிறார் உதயகம்மன்பில

ஜாதிக ஹெல உறுமய முன்வைத்துள்ள திருத்தங்கள் செயற்படுத்தப்படும் நிலைக்கு வரவில்லை என்றால், தொடர்ந்தும் அரசாங்கத்தில் இருக்கப் போவதில்லை என அந்தக் கட்சியின் செயலாளரான மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அரசியல் கருத்தரங்கொன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னனின் வாளால் வெட்டுப்படுவோம் என்ற பயம் இருந்தாலும் அரசியல் ரீதியான ஆபத்தை கவனத்தில் கொள்ளாது நாங்கள் எமது யோசனைகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்றுள்ளோம்.

இதனால், ஆத்ம கௌரவம் இருக்கும் அரசியல் அமைப்பு என்ற வகையில், எமது யோசனைகள் செயற்படுத்தப் படவில்லை என்றால், நாங்கள் அரசாங்கத்தில் இருக்கப் போவதில்லை என்று ஏற்கனவே தெரிவித்து விட்டோம்.


சுமார் 5 வருடங்களாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கும் நிலையில், ஜனாதிபதியின் தேவைகளை நிறைவேற்ற இந்தப் பலம் பயன்படுத்தப்பட்டதே அன்றி நாட்டின் தேவைக்காக பயன்படுத்தப்படவில்லை எனவும் உதய கம்மன்பில குறிப்பிட்டுள்ளார்.

# காணாமற்போனோர் அறிக்கை; கால எல்லை கூறமுடியாது

## ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

காணாமற் போனவர்கள் தொடர்பிலான அறிக்கை சமர்ப்பிக்கும் கால எல்லை கூறமுடியாது வடக்கு கிழக்கில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஆரம்ப கட்ட விசாரணை அறிக்கை விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும். ஆனால் எப்போது வழங்கப்படும் என்று கூறமுடியாது என காணாமற் போனவர்களை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மக்வெல் பராக்கிரம பரணகம தெரிவித்தார். முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமற் போனவர்கள் தொடர்பிலான விசாரணைகள் கடந்த 2, 3,4,5 ஆகிய தினங்களில் நடைபெற்றன.

இறுதிநாளான நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே ஆணைக்குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திலும் இடம்பெற்ற சாட்சியங்களிலும் 60 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த 230 பேர் ஆணைக்குழுவினால் அழைக்கப்பட்ட வேளை 185 பேர் மட்டுமே ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளனர.



இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலைய ஆண்டு நிறைவு விழாவும் புதிய கலை அரங்கு திறப்பு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டவர்களை காணலாம். (08)

# இந்துக்களின் குரல் சஞ்சிகை ஆன்மீகத்தின் வழிகாட்டியாகும்

## சஞ்சிகையின் ஆசிரியர் ஸ்ரீந்திரன் தெரிவிப்பு

(வலிகாமம்)

இன்றைய விஞ்ஞான யுகத்தால் வளர்ச்சியடைந்து வரும் உலகத்தில் இளைய தலைமுறையினர் மத்தியில் ஆன்மீகத்தின் மீதான நாட்டம் குறைவடைந்து செல்கின்றநிலையில் இந்து மதத்தை சேர்ந்தவர்களுக்கு வழிகாட்டியாக நிகழ்கிறது இந்துக்களின் குரல் ஆன்மீகச் சஞ்சிகை என சஞ்சிகையின் ஆசிரியர் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்தார்.

இந்துக்களின் குரல் சஞ்சிகையின் வெளியீட்டு விழா அண்மையில் மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள இந்து இளைஞர் சங்கத்தின் மண்டபத்தில் நடைபெற்றது அவர் அங்கு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இச் சஞ்சிகை இலங்கை வாழ் இந்துக்கள் மத்தியில் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் தான் இதனுடைய வெளியீட்டு விழா இம்மண்டபத்தில் இன்று வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எமது ஆசிரியர் குழாத்தில் ஒருவராகிய சிவ.சுதர்சனன் இந்த விழாவை வெகு சிறப்பாக ஒழுங்கமைத்து அறிஞர்சபையினை அழைத்து எமது சஞ்சிகையினை மதிப்பீடு செய்துள்ளார்.

இது எமக்கு உற்சாகத்தைத் தருகிறது. இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு இத்தகைய பேராதரவு எமக்கு அவசியமானதாகும். அவ்வகையில் இச்சபையில் உள்ள அறிஞர் பெருமக்களிற்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எமது சஞ்சிகை இந்து சமயம் சார்ந்த விடயங்களிற்கு விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை வழங்கிவருகிறது, இது இன்றைய தலைமுறையினை எமது சமயத்தின் பால் பற்றுக் கொள்ளவும் எமது சமயப் பெருமைகளை அறியவும் அதன் வழிநடக்கவும் வழிகாட்டியாக அமையும் எனத்திண்ணமாக நம்புகிறோம் எனத் தெரிவித்தார். (06)

# கரைச்சிபிரதேச செயலகத்தின் சிறுவர் முதியோர்தின விழா

(கிளிநொச்சி)

கரைச்சி பிரதேச செயலகப் பிரிவின் சர்வதேச சிறுவர் முதியோர் தின விழா எதிர்வரும் 10.11.2014 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையின் மருத்துவ கலாநிதி மா.ஜெயராஜா, வேள்ட் விஷன் நிறுவனத்தின் கிளிநொச்சி கல்வித் திட்டப் பணிப்பாளர் எக்ஸ். அஞ்சலிற்றோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (90)

# ஆலய பின்கதவை உடைத்து நீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

(கரவெட்டி)

கரவெட்டியாக்கரு பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் உணவுப் பொருட்கள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, குறித்த ஆலயத்தில் வழமை போன்று பூசகர் மாலை பூசை முடிவடைந்து கோவிலை பூட்டி விட்டு சென்றுள்ளார். இந்நிலையில் அன்றையதினம் இரவு ஆலய பின் கதவை உடைத்துக் கொண்டு உள்நுழைந்த திருடர்கள் அங்கிருந்த அரிசி, சீனி மற்றும் மண்ணெண்ணெய், அத்துடன் நீர் இறைக்கும் இயந்திரம் என்பவற்றை திருடிக்கொண்டு சென்றுள்ளதாகவும் அதிகாலை பூசகர் வந்து பார்த்த போதே களவு இடம்பெற்றமை தெரிய வந்ததாக கூறப்படுகிறது.

இத்திருட்டுச் சம்பவம் தொடாபாக நெல்லியடி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தற்போது நெல்லியடியை அண்டிய பகுதிகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (18)

# 'சொல்விற்பனம் கருத்தாடற்களம்'

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழக இளநிலை நிர்வாகிகள் நடாத்தும் சொல்விற்பனம் (கருத்தாடற்களம் - 03) நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நிகழ்வில் ஊடக எழுச்சிக்கு பெரிதும் தடையாக இருப்பது என்னும் பொருளில் 'சுழலும் சொற்போர்' கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அரசியல்வாதிகளின் ஆதிக்கமே எனும் பொருளில் தி.சுகந்தன், ஆளுமையின்மையே என்னும் பொருளில் த.இராமகிருஷ்ணா, ஊடகப்போட்டியே என்னும் பொருளில் ஐ.கஜமுகன், நிர்வாகத்தலையீடே என்னும் பொருளில் அ.ஹோசியா, அனுசரணையாளர் நெருக்கடியே என்னும் பொருளில் ஞா.கணாதீபன், மொழியாற்றல் குறைபாடே என்னும் பொருளில் ஆ.இ.வாமலோசனன் ஆகியோர் வாதிடவுள்ளனர்.

# தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள் ஆரம்பம்



(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் திண்மக்கழிவகற்றலுக்கென புதிய இடம் தெரிவுசெய்யப்பட்டு கழிவகற்றல் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் வைத்தியகலாநிதி திவாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திண்மக்கழிவகற்றும் பிரிவை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்க உறுப்பினரும் வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளருமாகிய லயன் .சோ.சுகிர்தன் திறந்து வைத்தார்.

இந்த திண்மக்கழிவு முகாமைத்துவத்தை மேற்கொள்வதற் கென வலி.வடக்கு பிரதேச சபையினர் கழிவகற்றும் வண்டி ஒன்றையும் சில கழிவகற்றும் குவளைகளையும் அன்பளிப்பாக வைத்தியசாலைக்கு வழங்கியிருந்தனர்.

இந்த நிகழ்வில் நோயாளர் நலன்புரி சங்கச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் மற்றும் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (90)

# பருத்தித்துறை – கிழக்கு பேருந்துசேவை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து அக்கரைப்பற்று திருகோணமலைக்கு தற்போது சேவையாற்றிக் கொண்டிருக்கும பேருந்துகள் அரச, தனியார் உத்தியோகத்தர்களினதும் மற்றும் பயணிகளினதும் வேண்டுகோளுக்கமைய இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் அச்சுவேலி வரை நீடிப்பு செய்யவுள்ளன.

இதற்கமைய அச்சுவேலி மத்திய பஸ் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு அச்சுவேலி, தம்பாலை, தொண்டமானாறு உடுப்பிட்டி வல்வெட்டித்துறை ஊடாக (751 பாதை வ்ழியாக) பருத்தித்துறை பேருந்து நிலையத்தை வந்தடைந்து, அங்கிருந்து கொடிகாமம் ஊடாக இப்பேருந்துகள் திருகோணமலை, அக்கரைபற்று வரை செயலாற்றும். மீண்டும் இப்பேருந்துகள் அக்கரைப்பற்று திருகோணமலையிலிருந்து புறப்பட்டு இதே பாதையூடாக அச்சுவேலியை வந்தடையும்.

இதன்படி அச்சுவேலி - திருகோணமலைக்கான பேருந்து சேவை காலை 3.30 மணிக்கு அச்சுவேலியிருந்து புறப்படும் எனவும் அச்சுவேலி அக்கரைப்பற்றுக்கான பேருந்துசேவை பி.ப. 5.15 மணிக்கு அச்சுவேலியிலிருந்து ஆரம்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பருத்தித்துறை திருகோணமலை செல்லும் பேருந்து காலை 4.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிக்கும் எனவும் அக்கரைப்பற்றுக்கான பேருந்து பி.ப. 5.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து ஆரம்பிக்கும் எனவும் இதேவேளை திருமலை - அச்சுவேலி செல்லும் பேருந்து திருமலையிலிருந்து நண்பகல் 12 மணிக்கும் கல்முனை அச்சுவேலி பேருந்து சேவை பிற்பகல் 7.30 மணிக்கு கல்முனையிலிருந்து ஆரம்பிக்கும் எனவும் இ.போ.சபை வட பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# கடூழிய சிறைத்தண்டனை

பெருமளவு சிமெந்து பைக்கற்றுகள் மற்றும் பிளாஸ்ரிக் கதிரைகளை களவாடியதாக குற்றஞ் சாட்டப்பட்டு கடந்த 28.08.2013 அன்று முள்ளிய வளை தண்ணீரூற்றுப்பகுதியில் கைது செய்யப்பட்ட இருவருக்கு தலா 6 மாத கடூழியச்சிறைத் தண்டனை விதித்து முல்லைத்தீவு மாவட்ட நீதி பதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

கைப்பற்றப்பட்ட சிமெந்து மூடைகள், கதிரைகள் என்பவற்றை முறைப்பாட்டாளரிடம் ஒப்படைத்து விடுமாறும் நீதிபதி உத்தரவிட்டதுடன் எதிராளியிடமிருந்து கைவிரல் அடையாளத்தை பெற்றுக்கொள்ளுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (170)

# குடும்பவாரியாக தகவல் திரட்டல் நாடளாவிய ரீதியில் விரைவில்

## ஆட்பதிவு திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல மக்களையும் அவர்களது குடும்பவாரியான விபரங்களையும் சேகரித்து களஞ்சியப்படுத்தும் புதிய திட்டத்தினை நடைமுறைப் படுத்தவுள்ளதாக இலங்கை ஆட பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மீரியாபெத்தயில் ஏற்பட்ட மண்சரிவின் போது பாதிக்கப்பட்ட மக்கள் குறித்து கணிப்பீடு செய்வதில் எழுந்துள்ள பிரச்சினையை கருத்திற்கொண்டே இந்த புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்று ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ஆர்.எம்.எஸ்.சரத குமார தெரிவித்தார். பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஊடக மையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், "கடந்த வாரம் மீரியா பெத்தயில் இடம்பெற்ற மண்சரிவு அனர்த்தத்தின்போது பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் சரியான எண்ணிக்கையினை பெற்றுகொள்வதில் பாரிய சிரமங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அதிக எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்டதான தகவல்களும் வெளியாகின. எதிர்காலத்தில் இவ்வாறான சிரமங்களை தவிர்த்துக் கொள்வதற்காக நாம் இந்த புதிய திட்டத்தை நடைமுறைப் படுத்த தீர்மானித்தோம். இந்த திட்டத்தின் பிரகாரம் ஒரு குடும்பத்திலுள்ள சகல அங்கத்தவர்களினதும் விபரங்கள் சேகரிக்கப்படுவதுடன் அவர்களது அடையாள அட்டை இலங்கங்கள் பதிவு செய்யப்படும்.

15 வயதுக்கு குறைந்த சிறுவர்கள் இருக்கும் பட்சத்தில் அவர்களுடைய விபரங்களும் சேகரிக்கப்படுவதுடன் அவர்கள் 16 வயதை அடையும் சந்தர்ப்பத்தில் அடையாள அட்டையினை பெற்றுக்கொள்ளுமாறு நேரடியாக அறிவுறுத்தப்படுவர்.

இதனூடாக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதில் ஏற்படும் சிரமங்கள் தவிர்க்கப் படும். இதேவேளை, இந்த வருடம் டிசம்பர் மாதம் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களில் 3.5 இலட்சம் பேரின் அடையாள அட்டைக்கான விணணப்பங்கள் மாத்திரமே எமக்கு கிடைத்துள்ளன.

அதில், 2.5 இலட்சம் வரையான அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் இனமும் 30 ஆயிரம் வரையான அடையாள அட்டைகளை வழங்குவதற்காக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

16 வயது பூர்த்தியடையாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் 50 ஆயிரம் உள்ளதுடன் 3 ஆயிரம் அளவிலான தகைமையற்ற அல்லது சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டு ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

நவம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் 16 வயது பூர்த்தியடையும் பாடசாலை மாணவர்கள், தமது விண்ணப்பங்களை விரைவாக இரண்டு வாரங்களுக்கு முன்னதாக அனுப்பும் பட்சத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு முன்பாக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ள முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

# போர் நிறைவிற்கு வந்தபின் வடக்கில் பல்வேறு முன்னேற்றம்

## அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவிப்பு



(கொழும்பு)

போர் நிறைவிற்கு வந்த பின்னர் வடக்கில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக வடக்கில் வாழ்கின்ற பெண்கள் இன்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருவ தாக நாடாளுமன்ற விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இன்று விவசாய பூமிகளாக மாற்றமடைந்துள்ளன.

குறித்த பிரதேசங்களில் போர் நிறைவுக்கு கொண்டுவரப் பட்டதால் தாய், சேய் மரண எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

இதனால் அந்தப் பிரதேச பெண்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர்.

நிலக்கண்ணி வெடிகள் பற்றிய அச்சம் கிடையாது. பிள்ளைகள் அச்சமின்றி பாடசாலைக்கு செல்லக்கூடிய சூழ்நிலை உருவாக்கப் பட்டுள்ளது.

அரசாங்கம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் ஊடாக தலா ஐம்பது லட்ச ரூபாவினை வழங்கி வருகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டால் இதனை விடவும் அதிகளவு பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.


நாடாளுமன்ற வரவு செலவுத்திட்ட விவாதத்தில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.



இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜோண் ரன்கீன் நேற்று முன்தினம் நுவரெலியாவிற்கு சென்று மண் சரிவினால் இடம்பெயர்ந்துள்ள சிறுவர்களுடன் உரையாடுவதைக் காணலாம்.

# உச்சநீதிமன்றில் ஜனாதிபதி விளக்கம் கோரியது ஏன்?

## சரத் என்.சில்வா விளக்கம்



வழக்கு தொடரப்படும் என்ற அச்சம் காரணமாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உச்ச நீதிமன்றில் சட்ட விளக்கம் கோரியுள்ளார் என பிரதமர் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவதனை தடுக்கும் நோக்கில் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே இவ்வாறு ஜனாதிபதி சட்ட விளக்கம் கோரியுளளதாக அவர் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றில் விளக்கம் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு அறிவிப்பு விடுக்க முடியுமா மற்றும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியுமா என்ற கேளவிகளையே அவர் எழுப்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சட்ட விளக்கம் கோரப்பட்ட இரண்டு கேள்விகளும் தனிப்பட்ட ரீதியானவையே தவிர, நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் கேட்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்ட விளக்கம் கோரியதன் மூலம் ஜனாதிபதி அரசியல் சாசன மீறலில் ஈடுபட்டுள்ளதாக குற்றஞ் சுமத்தியுள்ளார். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியமா என ஜனாதிபதி உச்ச நீதிமன்றில் விளக்கம் கோருவதன் மூலம், அவர் போட்டியிடத் தகுதியற்றவர என்பது நிரூபணமாகியுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நாடுகளுக்கிடையே பிரச்சினை; களமாக இருக்காது இலங்கை

## கூறுகிறார் கடற்படைத் தளபதி

(கொழும்பு)

நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு இலங்கை காரணமாக இருக்காது என இலங்கை கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த பெரேரா தெரிவித்துள்ளார்

இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையில் பிரச்சினையை உண்டாக்குவதற்கு இலங்கைக்கு அவசியம் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.



சீனாவின் நீர்மூழ்கி கப்பல் இலங்கைக்கு வந்துள்ளமை தொடர்பிலான செய்திக்கு மத்தியிலேயே ஜெயந்த பெரேராவின் இக்கருத்து வெளியாகியுள்ளது.

சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல் தொடர்பில் இந்தியா தமது கரிசனையை காட்டுவதை கொண்டே அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் கப்பல் விஜயமானது போர் ஒன்றை நோக்கமாக கொண்டது அல்ல. அது எரிபொருள் நிரப்பவும், மாலுமிகளின் ஓய்வுக்காகவுமே இலங்கைக்கு வந்துள்ளது என்று பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

# கொழும்பில் சீன நீர்மூழ்கி கப்பல் இந்தியாவிற்கு அச்சுறுத்தலா?

## இல்லை என்கிறார் அமுனுகம

சீன நீர்மூழ்கிகள் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்பது இந்தியாவுக்கு அச்சுறுத்தலான நிலைமையல்ல எனத் தெரிவித்துள்ள அமைச்சர் சரத் அமுனுகம ஆபிரிக்காவிலிருந்து வரும் வழியில் அவை இலங்கை வந்தன எனவும் குறிப்பிட்டார்.

புதுடில்லியில் நிகழ்வொன்றில் கலந்து கொண்டபோதே அமைச்சர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தினூடாக செல்லும் நூற்றுக் கணக்கான கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்பும் வசதிகளை வழங்குவதற்காக சீனாவின் உதவியுடன் பாரிய எரிபொருள் தாங்கிகளை அமைக்கும் நடவடிக்கையில் இலங்கை ஈடுபட்டுள்ளது.

இதேவேளை தமிழக மீனவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட விவகாரத்திற்கு தீர்வு காணப்படும் என்றும் நம்பிக்கை வெளியிட்ட அமைச்சர் இலங்கையில் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டார்.







ஒளி விழாவை முன்னிட்டு யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலய கிறிஸ்தவ மன்றத்தினரால் மாணவர்களுக்கிடையே பேச்சு, கவிதை, வினா விடை, வாழ்த்துமடல் தயாரித்தல் மற்றும் ஆக்கத்திறன் போன்ற போட்டி நிகழ்வுகள் நடாத்தப்பட்ட போது... (90)

# தமிழர்களிடம் அருகிவரும் கலைகள்

# வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்

## வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கலை என்பது பரம்பரை பரம் பரையாக தமிழர்கள் மத்தியில் சிறந்து விளங்கும் ஒன்றாகும் எனவே இக்கலை தமிழர்கள் மத்தியில் வளர்க்க நாம் பாடுபடவேண்டும் என வடமாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை, இளைஞர் விவகார அமைச்சு நடாத்தும் அழகியற் கல்வியில் 'நமதடையாளம்' எனும் தொனிப்பொருளில் கருத்தமர்வு ஒன்று நேற்றுமுன்தினம் காலை 9 மணியளவில் இலங்கை வேநதன் கலைக்கல்லூரியில் இடம் பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம விருந் தினராக கலந்துகொண்ட வட மாகாண கல்வி அமைச்சர் குரு குலராஜா உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பரம்பரை பரம்பரையாக தமிழர்களிடையே வளர்ந்து வரும் கலைகளில் நமது தமிழர்கள் சிறந்து விளங்க வேண்டும். ஆனால் தற்போது அந்தக் கலைகள் குறித்து பல பேருக்கு தெரிவதில்லை எனவே எமது மூதாதையர் விட்டுச்சென்ற கலைகளை எதிர்கால சந்ததியினரும் தொடரவேண்டும்.

தற்போதுள்ள சமூகத்தில் கோலம் போடும் பழக்கம் யாருக்குத் தெரியும்? முன்னைய காலங்களில் கோலம் போடுகின்றமை முக்கிய சிறப்பியல்பு. ஆனால் தற்பொழுது பாடசாலைகளிலும் சரி, வீடுகளிலும் சரி இந்த நடைமுறை இல்லை அவர்கள் இது தொடர்பில் பயிற்றுவிப்பதும் இல்லை.

இவ்வாறாக எம்மைச் சூழவுள்ள சமூகம் தமிழர்களின் கலையை வளர்க்க பாடுபட வேண்டும் என்பதே எனது கருத்து. 'நமதடையாளம்' அழி வடையக் கூடாது இதனை வளர்ப்பதற்கு நம்மாலான பங் களிப்பை செய்வதுடன் இந்த கலைக்குரிய வடிவமாக ஓர் ஆவணத்தைத் தயார் செய்து அதன்படி செயற்படுவோம் என்றார். (48)

# மாணவர்களுக்கான கல்விக்கருத்தரங்கு

(கைதடி)

கைதடி வளர்மதி கல்வி நிலையத்தால் தரம் 9 மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு நடாத்தப்படவுள்ளதுடன் கணித பாடத்திற்கு பண்டாரவளை கல்வி வலயத்தின் தமிழ்ப் பிரிவு பணிப்பாளர் சிவசம்பு மதியழகன், ஆசிரியர் நா.கஜேந்திரன் ஆகியோர் கற்பிக்க உள்ளனர்.

விஞ்ஞான பாடத்திற்கு பிரபல விஞ்ஞான ஆசிரியர் எம்.பிரியந்தன் நடாத்தவுள்ளார்.

மாணவர்கள் அனைவருக்குமான அனுமதி, பாடக்குறிப்பு என்பன இலவசமாக வழங்கப்படுமென வளர்மதி கல்வி நிலைய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர்.

தரம் 10, 11 ஆகிய வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்கும் மிக விரைவில் இது போல இலவசமாக கல்விக்கருத்தரங்கு நடைபெறவுள்ள தாகவும் வளர்மதி கல்வி நிலைய நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (90)

# முரசின் இன்றைய பலன்



(07.11.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 21 ஆம் திகதி.
பிரதமை / சித்தம்.
பரணி நட்சத்திரம் பிற்பகல் 04.06 வரை. பின் கார்த்திகை.
இராகு காலம் 10.35 - 12.05 வரை. சுபநேரம் 06.05 - 07.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெளிநாட்டு வேலையை நம்பி ஏமாறுதல், காசோலையை மோசடி செய்தல். |
| ரிஷபம் | நிகழ்வில் கலந்து கொள்ளாமையால் அவமானப்படல், விவாகத்திற்காக வெளியூர் மணமகனை தேடல். |
| மிதுனம் | விவாகம் ஒப்பேறும் நிலைக்கு வருதல், நம்பி நடந்தவரின் துரோகத்தனத்தினால் அதிர்ச்சி ஏற்படல். |
| கடகம் | உணவுப் பதார்த்தத்தினால் ஒவ்வாமை ஏற்படல், வீட்டு இரகசியங்களை கூறுவதை தவிர்தல். |
| சிம்மம் | போலி பணத்தால் நஷ்டம் ஏற்படல், சுபகாரிய நிகழ்விற்காக நண்பரிடம் பணம்கேட்டல். |
| கன்னி | எதிர்பாராத பிரச்சினை ஏற்படல், தரிசனத்தால் நன்மை ஏற்படல். |
| துலாம் | குழறுபடியால் உறவில் விரிசல், பணத்தால் வாக்குக் கலகம் தோன்றல். |
| விருச்சிகம் | ஏழரைச்சனியால் தொழில் நஷ்டம் ஏற்படல், சொத்துப் பிரச்சினை சுமூகமாக ஏற்படல். |
| தனுசு | அமங்கல நிகழ்வுக்கு செல்லும் நிலை, ஒவ்வாத மருந்தால் நலம் பாதிப்படைதல். |
| மகரம் | ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருத்தல், ஒன்றை நினைக்க அதுவேறொன்றாகி அதிர்ச்சியை ஏற்படுத்தல். |
| கும்பம் | நோய் குணமடைய ஆலயத்தை நாடுதல், போட்டியின்றித் தெரிவு செய்த பதவி கிடைத்தல். |
| மீனம் | அரசு பணிபெற அரசியல் பிரமுகரின் தயவை நாடவிழைதல், விளம்பரத்தால் மோசடி ஏற்படும் நிலை. |

# உடுவில் பிரதேச செயலர் பிரிவில் டெங்குத்தொற்று அதிகரிப்பு

உடுவில் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் கடந்த 10 மாதங்களில் 100 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தகவல்கள் தெரிவித்துள்ளன.

அதிலும், கடந்த 2 மாதங்களில் (செப்ரெம்பர் - ஒக்ரோபர்) மட்டும் 49 டெங்குநோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் உடுவில் பிரதேசத்தில் டெங்குநோய் அதிகரித்தமைக்கு அப்பகுதிகளிலுள்ள சபாபதிப்பிள்ளை, பெரிய மத வடி நலன்புரி முகாம்கள் ஆகியவற்றிலுள்ள கழிவுகள் அகற்றப்படாமையும் அங்குள்ள மலசல கூடங்கள் திருத்தப்படாமையுமே காரணம் என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இது தொடர்பாக தெரிவிக்கையில்,

உடுவில் பிரதேச செயலாளர் எம்.நந்தகோபாலன் நலன்புரி முகாம்களில் டெங்கு நோய்கள் உருவாவதற்கு உரிய காரணங்கள் குறைவு. வெளியிடங்களில் இருந்து உடுவில் பிரதேசத்திற்கு வருகை தந்தவர்களால்தான் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது.

அத்துடன் இந்த வருடம் நலன்புரி முகாம்களுக்கு 2.9 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் 1.5 மில்லியன் ரூபாய் பெறுமதியான திருத்தப்பணிகள் நிறைவடைந்துள்ளன.

அந்த நிதியில் நீர் விநியோகம், மலசல கூடம் அமைத்தல், பொதுக்கிணறு அமைத்தல், முன்பள்ளிகள் திருத்துதல், புதிய நீர்ப்பம்பி அமைத்தல் போன்ற பல்வேறு வேலைத்திட்டங்கள் நிறைவடைந்துள்ளன. அத்துடன், நலன்புரி முகாமின் சுகாதார நடைமுறைகள் தொடர்பிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார்.(48)

## கோழித்திருட்டு அதிகரிப்பு

வடவரணி பகுதியில் தற்போது கோழித் திருட்டு அதிகரித்துள்ளதாக கோழி வளர்ப்போர் கவலை தெரிவிக்கின்றனர்.

பகல்வேளைகளில் இருந்து திறந்து விடப்படும் கோழிகளையும் இரவுவேளை மழைபெய்யும் வேளையில் அதைச் சாதகமாக பயன்படுத்தும் திருடர்கள் தமது கைவரிசையை காட்டிவருகின்றனர். கடந்த வாரம் மட்டும் நான்கு வீடுகளில் கோழிகள் திருட்டு போயுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். (150)

# கல்விக்கு உதவி வழங்கல்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுள் ஒருவரான அளவெட்டி அருணோதயக் கல்லூரியை சேர்ந்த பரமேஸ்வரன் சஞ்சாய் என்பவரைப் பாராட்டி புலம் பெயர் தமிழரான சிறிதாசன் அனுசரணையில் ஜேர்மன் 'உதவும் இதயங்கள்' அமைப்பின் ஊடாக துவிச்சக்கரவண்டி ஒன்றும் ஒரு தொகைப் பணமும் வலி.வடக்கு பிரதேசசபை துணை தவிசாளர் சண்முகலிங்கம் சஜீவனால் அண்மையில் வழங்கப்பட்டது.

மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர் இதுவரை காலமும் கல்வி கற்பதற்கு அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் இருந்து கல்வி கற்று வலிகாமம வடக்கிற்கு பெருமை சேர்த்துள்ளார். இம்மாணவனின் விடா முயற்சியும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வழி காட்டலும் அவர் சாதனை படைக்க உதவின.

இம்மாணவன் எதிர்காலத்திலும் கல்வியில் சாதனை படைக்க வலி.வடக்கு பிரதேச சபை துணை தவிசாளர் சஜீவனால் மாதாந்த படிப்பு செல வுக்காக ரூபா 2000.00 வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் மின்சார சபையிடமும், பிரதேச செயலகத்திடமும் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணங்க மின்சாரமும் வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் அருணோதயா கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன், புலம் பெயர் தமிழரான சிறிதாசன், மாணவனின் தாய், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# ஐ.சி.சி.யின் கனவு அணிப் பட்டியல் டெஸ்ட் கப்டனாக மத்தியூஸ்



(டுபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் நடப் பாண்டுக்கான கனவு டெஸ்ட் அணியின் கப்டனாக இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான சிறந்த டெஸ்ட், சிறந்த ஒரு நாள் கனவு அணிகளை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளது.

ஒருநாள் போட்டிக்கான ஐ.சி.சி. கனவு அணியின் கப்டனாக இந்திய அணிக் கப்டன் எம்.எஸ்.டோனி தேர்வு செய்யப் பட்டுள்ளார். ஹோலி, ரோகித் சர்மா, மொஹமட் சமி ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

இதேவேளை, டெஸ்ட் கனவு அணிக் கப்டனாக இலங்கை அணியின் கப்டன் மத்தியூஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் இந்த அணியில் குமார் சங்கக்கார, ரங்கண ஹேரத் ஆகியோர் இடம்பிடித் துள்ளனர்.

ஐ.சி.சி. ஒருநாள் அணி: மொஹமட் ஹபீஸ், குவின்டான் டி கொக், ஹோலி, ஜோர்ஜ் பெய்லி, டி வில்லியர்ஸ், எம்.எஸ்.டோனி (கப்டன் - விக்கெட் காப்பாளர்), டுவைன் பிராவோ, ஜேம்ஸ் போல்க்னர், டேல் ஸ்ரெய்ன், மொகமட் சமி, அஜந்த மெண்டிஸ், ரோகித் சர்மா (12வது வீரர்).

ஐ.சி.சி. டெஸ்ட் அணி: டேவிட் வோர் னர், வில்லியம்ஸன், குமார் சங்கக்கார, டிவில்லியர்ஸ், ஜோ ரூட், அஞ்சலோ மத்யூஸ் (கப்டன்), மிச்சல் ஜோன்சன், ஸ்டுவர்ட் புரொட், டேல் ஸ்ரெய்ன், ரங்கண ஹேரத், ரிம் சௌத்தி, ரெய்லர் (12வது வீரர்)

இதேவேளை, ஐ.சி.சி. டெஸ்ட் மற்றும் ஒரு நாள், ருவென்ரி-20 போட்டி களில் சிறப்பாக செயற்பட்டு சிறந்த வீரருக்கான ஐ.சி.சி. விருதை வெல்ல வுள்ளோரின் குறும்பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

விருதுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள் ளோர் விபரம் வருமாறு:

ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீரர்: டிவில்லியர்ஸ், மிச்சல் ஜோன்சன், மத்தியூஸ், சங்கக்கார

சிறந்த டெஸ்ட் வீரர் விருது: மிச்சல் ஜோன்சன், மத்தியூஸ், சங்கக்கார, டேவிட் வோர்னர்.

ஒரு நாள் போட்டியில் சிறந்த வீரர் விருது: குயின்டன் டி கொக், டிவில்லியர்ஸ், ஹோலி, ஸ்ரைய்ன்

பெண்களுக்கான ஒரு நாள் போட்டிக் கான விருது: சார்லோட்டி எட்வேர்ட்ஸ், மிதாலி ராஜ், சாரா டெய்லர், ஸ்ட பி-னாயா டெய்லர்

வளர்ந்து வரும் இளம் வீரர் விருது: கரி அண்டர்சன், பேலன்ஸ், நீஷம், பென் ஸ்டோக்ஸ்

ருவென்ரி-20 போட்டிக்கான விருது: அலெக்ஸ் ஹேல்ஸ் (இங்கி.,), ஆரோன் பின்ச் (ஆஸி.,), ஹேரத் (இலங்கை)

பெண்கள் ருவென்ரி-20 போட்டிக்கான விருது: சர்லோட்டி எட்வேர்ட்ஸ், மெக் லானிங் (ஆஸி.,), மிதாலி ராஜ், ஸ்ட பினா டெய்லர்.

இதேவேளை, சர்வதேச கிரிக்கெட் சபையின் மக்களின் மனம் கவர்ந்த வீரராக இந்திய அணியின் வேகப் பந்து வீச்சாளர் புவனேஷ்வர் குமார் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெய்ன், ஆஸி. வேகம் மிச்சல் ஜோன்சன், இங்கி லாந்து மகளிர் அணி கப்டன் சார்லோட்டி எட்வர்ட்ஸ், இலங்கை கப்டன் அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோரின் கடும் போட்டிக் கிடையே புவனேஸ்வர் குமார் இந்த விருதைப் பெற்றுள்ளார்.

சச்சின் (2010), டோனியை (2013) தொடர்ந்து இந்த விருதை பெறும் 3ஆவது இந்திய வீரர் என்ற பெருமை புவனேஷ்வருக்கு கிடைத்துள்ளது. அவ ருக்கு இந்திய கிரிக்கெட் சபை வாழ்த்து தெரிவித்துள்ளது. இலங்கையின் சங்கக் கரா 2011, 2012இல் இந்த விருதைப் பெற்றுள்ளார். தனக்கு ஆதரவாக வாக் களித்த அனைவருக்கும் நன்றி தெரிவித் துள்ள 24 வயதான புவனேஷ்வர்குமார், அணியின் சக வீரர்களுக்கும் நன்றி தெரிவித்து இருக்கிறார். அவர்களின் (சக வீரர்கள்) ஆதரவு இல்லை என்றால் இது நடந்திருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.சி.சி.யின் டெஸ்ட் அணியின் தலை வராக தெரிவாகியுள்ள இலங்கை கப்டன் மத்யூஸிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது ட்விட்டர் பக்கத்தில் இந்த வாழ்த்துச் செய்தியினை பதிவு செய்துள்ளார்.

டெஸ்ட் அணியில் இலங்கை அணி யைச் சேர்ந்த குமார் சங்கக்கார மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோரும் இடம்பிடித் துள்ள அதேவேளை, ஒரு நாள் அணி யில் அஜந்த மெண்டிஸ் இடம்பிடித் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனவு அணி குறித்து கும்ளே

அனில் கும்ளே தலைமையிலான ஐ.சி.சி. கிரிக்கெட் கமிட்டி, வீரர்களை தேர்வு செய்துள்ளது. அணித் தேர்வு குறித்து கும்ளே குறிப்பிடுகையில், 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26ஆம் திகதி முதல் 2014ஆம் ஆண்டு செப்ரெம்பர் 17ஆம் திகதி வரை விருதுக்குரிய காலகட்டமாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 12 மாதங் களில் மிகச்சிறப்பாக செயற்பட்ட பல வீரர் கள் அடங்கிய பட்டியலில் இருந்து குறிப் பிட்ட வீரர்களை கனவு அணிக்கு தேர்வு செய்ய வேண்டும் என்பது உண்மை யிலேயே மிகவும் கடினமான பணிகளில் ஒன்றாகும். என்றாலும் சாத்தியமானவரை சரியான கலவையில், எந்த அணியை யும் எந்த சூழலிலும் தோற்கடிக்க கூடிய திறமை படைத்த சிறந்த அணியை தேர்வு செய்திருப்பதாக நினைக்கிறோம். எதி ரணி எப்படிப்பட்டது, ஆடுகளம், ஆட் டத்தின் சூழல் ஆகியவற்றையும் வீரர் களின் தேர்வின் போது கவனத்தில் கொண்டோம். நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அபார திறமையை வெளிப்படுத்திய வீரர் களுக்கு கிடைத்த அங்கீகாரம் இது வாகும் என்றார்.




## இலங்கைத் தொடர் அண்டர்சன் விடுவிப்பு

(லண்டன்)

இலங்கையில் நடைபெறவுள்ள இங் கிலாந்து, இலங்கை அணிகளுக் கிடையிலான கிரிக்கெட் தொடரிலிருந்து இங்கிலாந்து அணியின் முன்னணி பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அன்டர்சன் விடு விக்கப்பட்டுள்ளார்.

உலகக்கிண்ண தொடருக்கு அவர் பூரண உடற் தகுதியுடன் இருக்க வேண் டும் என்ற காரணத்திற்காகவே அவர் அணியில் இருந்து விலக்கப்பட்டு ஓய்வு வழங்கப்பட்டுளளது.

அவருடைய இடது முழங்காலில் சிறிய உபாதை ஒன்று ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக அந்த உபாதை மேலும் அதிகரிக்காமல் இருக்கவே இந்த ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இங்கிலாந்து அணி தமது இரு முன்னணி பந்துவீச்சாளர்களும் இல்லாமலேயே இலங்கையில் விளையாட வுள்ளது. ஸ்டுவோர்ட் ப்ரோட் ஏற்கனவே சத்திர சிகிச்சை மேற்கொண்டுள்ள நிலை யில் அணியில் இடம்பெறவில்லை. அண்டர்சனின் இடத்திற்கு இன்னும் மாற்று வீரர் அறிவிக்கப்படவில்லை. இம்மாத நடுப்பகுதியில் இங்கிலாந்து இலங்கைக்கு வரவுள்ளது.



## முதலாவது ருவென்ரி-20 தென்னாபிரிக்காவுக்கு வெற்றி

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முத லாவது ருவென்ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி ஏழு விக்கெட் டுக்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலியா சென்றுள்ள தென்னா பிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட ருவென்ரி-20 தொடரில் பங் கேற்று வருகின்றது. இப்போட்டித் தொட ரின் முதல் போட்டி அடிலெய்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி 20 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட் டுக்களை இழந்து 144 ஓட்டங்களைப் பெற்றது. இதில் போல்க்னர் ஆட்ட மிழக்காது 41, கப்டன் ஆரோன் பின்ச் 14, கமரூன் வையிட் 24, வட்சன் 47 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் அபாட் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய தென்னாரிக்க அணி ரிலீ ரோசவின் அதி ரடித் துடுப்பாட்டத்தின் மூலம் இலகு வாக வெற்றிபெற்றது. இறுதியில் தென்னா பிரிக்க அணி 19 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி யிலக்கை அடைந்தது. இதில் ரிலீ ரோசவ் 78, குயின்டன் டி கொக் 46 ஓட்டங் களைப் பெற்றனர். இதன் மூலம் தென்னா பிரிக்க அணி ஏழு விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாய கனாக ரிலீ ரோசவ் தெரிவு செய்யப் பட்டார். இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது ருவென்ரி-20 போட்டி இன்று மெல்பேர்னில் நடைபெறவுள்ளது.

## மெத்தனம் என்ற பேச்சுக்கே வாழ்க்கையில் இடமில்லை

தொடர்ந்து ஓட்டங்கள் குவிப்பதால் மெத்தனமாக இருக்கமாட்டேன். எனது வாழ்க்கையில் மெத்தனம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அணியை வெற்றி பெற வைக்கவேண்டும் என்பது தான் எனது ஒரே குறிக்கோள். அந்த உணர்வுக்குத் தான் நான் ஆட்பட்டுள்ளேன். நிறைய ஓட்டங்கள் குவித்து, அத்தோடு இந்த ஆட்டத்தில் அணியும் வெற்றி பெற்றால், அதை விட மகிழ்ச்சி எதுவும் இருக்க முடியாது. அப்போது அணி வீரர்களின் முகத்திலும் புன்னகை தவழும். அது தான் எனக்கு வேண்டும் என இந்திய அணி கப்டன் ஹோலி தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத் திர துடுப்பாட்ட வீரர் ஹோலி நேற்று முன்தினம் தனது 26ஆவது பிறந்த தினத்தை சக வீரர்களுடன் விடுதி அறை யில் கேக் வெட்டி கொண்டாடினார். இந்த முறை கப்டன் பொறுப்புடன் அவர் பிறந்த நாளைக் கொண்டாடினார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே ஹோலி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கை யில், நான் எங்கு இருக்கிறேன், என்ன சாதிக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் ஒரு சராசரி கிரிக்கெட் வீர ராக இருக்க விரும்பவில்லை. இந்திய அணியில் இவரும் விளையாடினார் என்று சாதாரணமாக நினைவு கூரப்படு வதையும் விரும்பவில்லை. எங்களுக்கு பின் இந்திய அணிக்காக விளையாடும் இளம் வீரர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க ஆசைப்படுகிறேன். எனது தேசத் திற்காக ஏதாவது சிறப்பு சேர்க்க வேண் டும் என்பது தான் எனது விருப்பம் என்றார்.

இதேவேளை, ஒரு நாள் போட்டியில் 140ஆவது இனிங்ஸுக்குள் 99 ஓட்டங் கள் சேர்த்து விட்டால், அதிவேகமாக 6 ஆயிரம் ஓட்டங்களை கடந்த மே.தீவு கள் ஜாம்பவான் விவியன் ரிச்சர்ட்சின் (141ஆவது இனிங்ஸில்) 25 ஆண்டு கால சாதனையை ஹோலி முறியடித்து விடுவார




இந்திய கிரிக்கெட் நட்சத்திரமான சச்சின் டெண்டுல்கர் தனது சுய-சரிதை நூலை நேற்று முன்தினம் வெளியிட்டார். பிளேயிட் இட் மைவே எனும் தலைப்பிலான இந்நூலின் முதற் பிரதியை தனது தாயார் ரஜினி டெண்டுல்கரிடம் சச்சின் வழங்கினார்.


# தடகளப் போட்டியில் சாதிக்க சுயமுயற்சியே அதிகம் தேவை

## எடுத்துக்காட்டாக விளங்கும் அபிமன்

(யாழ்ப்பாணம்)

சுயமுயற்சி அதிகம் இருந்தால் மாத்திரமே தடகளப் போட்டிகளில் சாதிக்க முடியும். குறிப்பாக, ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போன்ற போட்டிகளில் சாதிக்க வேண்டுமானால் நிச்சயம் அப்போட்டிகளில் பங்குகொள்ள விரும்பும் வீரர்களுக்கு சுயமுயற்சி அதிகம் இருக்கவேண்டும். அதன் மூலம் தான் சாதிக்க முடியும். இதில் ஓட்டப் போட்டிகளில் தேசிய மட்டத்தில் பதக்கங்கள் வெல்வது என்பது இலகுவான காரியம் கிடையாது. அதுவும் உலகளாவிய ரீதியில் கறுப்பு இனத்தைச் சேர்ந்தவர்களால் ஓட்டப் போட்டிகளில் சாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச ஓட்டப் போட்டிகளில் பங்குகொள்வோர் சாதித்ததாக வரலாறு இல்லை. ஆனால் ஓட்டப் போட்டிகளில் இலங்கைக்குப் பதக்கம் வென்று கொடுக்க வேண்டும் என பலர் விருப்புடன் முயற்சிக்கின்றார்கள். இதன் முதல் முயற்சியில் தான் எங்கள் யாழ். மத்திய கல்லூரி வீரர் ஜெயித்திருக்கிறார்.

கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்ட விழாவின் 21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி வீரர் கே. அபிமன் 49.71 செக்கனில் நிறைவு செய்து வெள்ளிப் பதக்கத்தையும் நிற விருதினையும் பெற்றுள்ளார். இது வடமாகாண பாடசாலைகள் வரலாற்றில் ஒரு மைல் கல்லாகக் கருதப்படுகின்றது.



அந்த வகையில் அகில இலங்கை பாடசாலைகளுக் கிடையிலான தேசிய மட்டப் போட்டியில் பதக்கம் வென்று வடமாகாணத்திற்கு பெருமை சேர்த்திருக்கும் யாழ். மத்திய க்ல்லூரி வீரர், யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த ஜெயந்திரன் அபிமனை நாங்களும் வாழ்த்த வேண்டும், எங்கள் வாசகர்களும், விளையாட்டில் சாதிக்க வேண்டும் என விரும்புவோரும் அறிய வேண்டும் என்பதற்காக அவருடன் சில வினாடிகளை செலவிட்டோம்.

அவர் மனதில் உள்ளவற்றை, எமக்குத் தெரிவித்த கருத்துக்களை தொகுத்து வழங்குவதில் நாமும் பெருமை கொள்கிறோம். அதன் விபரம் வருமாறு:,

இடைநிலைக் கல்வியினை கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் கற்றபோது 17 வயதுப் பிரிவுக்கான 100 மீற்றர், 200 மீற்றர் போட்டிகளில் வெற்றிகள் பல வற்றைப் பெற்றேன். இதன் பின்னர் உயர்தரம் கற்பதற்காக யாழ். மத்திய கல்லூரிக்கு வந்த பின்னர் தான் எனது புதிய மெய்வல்லுநர் செயற்பாடுகள் ஆரம்பமாகியன. எனது பயிற்றுநர் சுகிதன் ஆசிரியர் என்னால் 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் சாதிக்க முடியும். திறமையான அடைவு மட்டத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு ஏற்படுத்தினர். ஆரம்பத்தில் இதில் எனக்கு உடன்பாடு இல்லை. தயக்கமாகவும், பயமாகவும் இருந்தது. 400 மீற்றர் ஓட்டத்தினை 57 செக்கனில் தான் நிறைவு செய்தேன். இதற்கு தொடர் பயிற்சி முக்கியம். ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6.30 மணி முதல் 8 மணி வரை பயிற்சி செய்வேன். போட்டிகள் நடைபெறும் காலங்களில் மாலை வேளைகளிலும் பயிற்சி செய்வேன். இந்தப் பயிற்சி அட்டவணையில் எந்தவித மாற்றத்தையும் நான் செய்தது கிடையாது.

முறையான பயிற்சியை தொடர்ந்து செய்ததன் மூலமே 16 மாதங்களின் பின்னர் தேசிய மட்டப் போட்டியில் 49.6 செக்கன்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கம் வெல்லக் கூடியதாக இருந்தது.

இது முதற் கட்ட வளர்ச்சி. இதற்கும் அப்பால் சாதிக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். 400 மீற்றர் தூரத்தினை 48 செக்கன்களில் ஓடி முடிக்க வேண்டும் என விரும்புகின்றேன். அதேபோல் 200 மீற்றர் ஓட்டத்திலும் சாதிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்குள் ஊடுருவியுள்ளது. இது மெய்வல்லுநர் துறையில் சாதிக்க வேண்டும் என்ற ஊக்கத்தை எனக்கு அளிக்கிறது. மேலும் உடற்கல்வி ஆசிரியராகவோ அல்லது பயிற்சியாளராகவோ கடமையாற்றி பல வீரர்களை இத்துறையில் உருவாக்கவேண்டும் என்ற விருப்பும் எனக்கு இருக்கின்றது.

எனது எண்ணங்களைப் புரிந்து எப்பொழுதும் எனக்கு உறுதுணையாக இருப்பவர்கள் உண்மையில் என் பெற்றோர்களே. பல கஷ்டங்கள் வந்தபோதிலும் எனக்கு அவர்கள் பக்கத்துணையாக இருந்துள்ளனர். இருந்து வருகின்றனர். பயிற்சியாளர் சுகிதனும்,கல்லூரி அதிபரும் எனக்குத் தேவையான உதவிகளை மறுக்காது, சளைக்காது பெற்றுத் தருகின்றனர். இந்த ஒத்துழைப்பு என்னை மேலும் மேன் நிலைக்கு இட்டுச் செல்லும் என்றார்.

**தயாளபாலன்**

## முதல் இனிங்ஸ் முன்னிலை; ஸ்கந்தா வசம் வெற்றி

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக் கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிகளுக்கிடையிலான ஆட்டம் நேற்று முன்தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடியு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி 40.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெறறது. இதில் சிவதர்சன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டன்சன் ராஜன் நான்கு, தனுஸ்ரன் மூன்று, டிக்சிகன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி கஜதீபனின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 98 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கஜதீபன் 28, டனுஜன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிந்துஜன் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 38 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் போட்டி நிறைவுக்கு வந்தது. இதில் சிவதர்சன் 12 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் டன்சன்ராஜ் நான்கு விக்கெட்டுக்களைக்கைப்பற்றினார். முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி போட்டி விதியின் படி வெற்றிபெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி யும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (17, எஸ்.பி.)

## 6 விக்கெட்டுக்களால் வென்றது சென். ஜோண்ஸ்




(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் சென். ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனக் கல்லூரி அணி கிருசான், விதுசன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசான், விதுசன் ஆகியோர் தலா 17, யான்சன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கானகன் ஐந்து சுவிதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி நிசாந்தனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. நிறைவில்சென். ஜோண்ஸ் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராஜீத், சுகிதன் ஆகியோர் தலா எட்டு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிசாந்தன் ஐந்து, நிரோசன், யான்சன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

34 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி பிரவிந்தனின் பந்து வீச்சிற்கு ஈடு கொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. நிறைவில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய மகாஜனக் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 15 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிருசன் நான்கு ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் பிரவிந்தன் ஐந்து, சுவிதன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 50 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் விதுசன் 16, டினோசன் 9 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிரோசன் இரண்டு, நிசாந்தன், கிருசன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இதன் மூலம் சென். ஜோண்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. (93)




**கொக்குவில் இந்துக் கல்லூரியினால் நடாத்தப்பட்ட கீர்த்தனன் நினைவுக் கிண்ண கூடைப்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற யாழ். இந்துக் கல்லூரி அணியைக் காணலாம். கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை வீழ்த்திய யாழ். இந்துக் கல்லூரி கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)**

# தடை நீக்கம்: அரசுக்கு சாதகம்

- எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் என்று ஐரோப்பிய நீதிமன்றம் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வழங்கியிருக்கும் ஆணையைப் பற்றி இலங்கையில் இரண்டு தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை நீக்கியிருக்கிறது என்பது அவற்றில் ஒரு தவறான கருத்தாகும். தடையை நீக்க வேண்டும் என்று ஐரேப்பிய நீதிமன்றம், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதேயல்லாமல் ஐரோப்பிய ஒன்றியம் தடையை நீக்கவில்லை.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அண்மையில் ஐரேப்பாவுக்குச் சென்று புலம்பெயர் தமிழர்களை சந்தித்து இரண்டு வாரங்களில் இத் தடை நீக்கம் இடம் பெற்றுள்ளது என்றும் அரச தலைவர்கள் கூறுகிறார்கள். அதாவது விக்கிரமசிங்கவின் தூண்டுதலாலேயே தடை நீக்கம் இடம் பெற்றுள்ளது என்றே அவர்கள் கூறுகிறார்கள். இதுவும் தவறான கருத்தாகும்.

விக்கிரமசிங்க, அண்மையில் ஐரோப்பாவுக்கு விஜயம் செய்ததன் பின்னர் புலம்பெயர் தமிழர்கள் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை. மாறாக அது 2011ஆம் ஆண்டு தாக்கல் செய்ததொன்றாகும்.

வரப்போகும் ஜனாதிபதித் தேர்தலின் போது புலம் பெயர் தமிழர்கள் இலங்கையிலுள்ள தமது உறவினர்களை விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்க தூண்டும் வகையிலேயே தடை நீக்கம் செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் விமல் வீரவன்ச விசித்திரமான கருத்தொன்றை முன் வைத்திருக்கிறார்.

புலித் தடை இருந்தால் புலம்பெயர் தமிழர்கள் தமது உறவினர்களை தூண்ட முடியாதா என்ற கேள்வி இங்கே எழுகிறது. புலித் தடை நீக்கத்தை எதிர்க்க வேண்டியவர்கள் அதனை தமக்கு சாதகமாக்கிக் கொள்ள முயற்சிப்பதையே இது காட்டுகிறது. எனவே அரச தலைவர்கள் தடை நீக்கத்தை விரும்புகிறார்கள் எனலாம்.

ஒரு வகையில் இந்தத் தீர்ப்பைப் பற்றி ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர்கள் வெட்கப்பட வேண்டும். முறையாக சட்ட விதிகளைப் பின்பற்றாமல் ஐரோப்பிய ஒன்றியம் புலிகளை தடை செய்துள்ளது என்று கூறியே, நீதிமன்றம் அத் தடையை நீக்க வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளது.

சட்டத்தின் ஆதிக்கத்தை மதிக்க வேண்டும் என்று ஏனைய நாடுகளுக்கு போதித்து வரும் ஐரோப்பிய ஒன்றியமே சட்டத்தை முறையாக பின்பற்றவில்லை என ஐரோப்பிய நீதிமன்றம் இப்போது தீர்ப்பளித்துள்ளது. இது வெட்கப்பட வேண்டிய விடயம் இல்லையா?

ஜனநாயக விதிமுறைகளை பின்பற்றவில்லை என்றும் சட்டத்தின் ஆதிக்கத்தை ஏற்று நடக்கவில்லை என்றும் குற்றஞ்சாட்டி ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை உட்பட பல நாடுகளை பல்வேறு விதமாக தண்டித்தும் உள்ளது. இதே குற்றச்சாட்டின் பேரிலேயே இலங்கையிலிருந்து ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகளுக்காக இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த ஜீ.எஸ்.பி வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் 2010ஆம் ஆண்டு இரத்துச் செய்தது.

அந்த ஐரோப்பிய ஒன்றியமே சட்டத்தை முறைப்படி பின்பற்றவில்லை என்று ஐரோப்பிய நீதிமன்றமே தீர்ப்பு வழங்கியிருக்கும் நிலையில், தமக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எந்தளவு நியாயமானவை என இலங்கை உட்பட அந்த நாடுகள் இப்போது கேள்வி எழுப்பலாம்.

புலிகளை தடை செய்யும் விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியம் மிகவும் பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டுள்ளது என்பது தெளிவான விடயமாகும். ஊடகங்களில் வந்த செய்திகளால் தான் 2006ஆம் ஆண்டு புலிகளை தடை செய்ய வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதியிருக்க முடியாது. இலங்கையிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள், இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்களைப் பற்றி தத்தம் நாடுகளுக்கு அனுப்பிய அறிக்கைகளும் இலங்கை அரசாங்கத்தின் நெருக்குதலுமே இத் தடைக்கு முக்கிய காரணமாகின.



அக் காலத்தில் புலிகளின் பயங்கரவாதப் போக்கை காண தூதுவர்கள் போர்க் களத்துக்குச் செல்ல வேண்டியிருக்கவில்லை. கொழும்பிலும் அதனை சுற்றியும் புலிகள் பஸ்களிலும் ரயில்களிலும் உல்லாசப் பிரயாண ஹோட்டல்களிலும் வங்கிகளிலும் சாதாரண மக்களை படுகொலை செய்தனர். அவற்றை பகிரங்கமாக நியாயப்படுத்தியும் வந்தனர்.

2002 பெப்ரவரி 21, 22 ஆகிய தினங்களில், புலிகளுக்கும் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கும் இடையே போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டதன் பின்னர், புலிகளின்

---

# கே.வி. மகாதேவன்



24

- பி.ஜி.எஸ்.மணியன் -

"பாவை விளக்கு" படத்தின் பாடல்கள் ஐம்பது வருடங்களைக் கடந்த பிறகும் உயிர்ப்புடன் காற்றலைகளில் நிலைத்து நிற்பது பிரமிக்க வைக்கும் சாதனைதான்.

படத்தில் சிவாஜி கணேசனுக்கான அனைத்துப் பாடல்களையும் சி.எஸ். ஜெயராமனைப் பாடவைத்திருந்தார் கே.வி. மகாதேவன்.

தனது முதல் படமான "பராசக்தி"யில் தனக்குப் பாடிய சி.எஸ். ஜெயராமனின் குரலின் மீது நடிகர் திலகத்துக்கு ஒரு தனி மோகமே உண்டு. ஆரம்பத்தில் "தூக்கு தூக்கி" படத்தில் தனக்காக டி.எம். சௌந்தரராஜனைப் பாடவைக்க முடிவெடுத்தபோது அவர் "ஜெயராம பிள்ளையை எனக்காக பாடவைக்காம வேற யாரையோ பாடவைக்கணும்னு சொல்றீங்களே" என்று குறைப்பட்டுக்கொண்டது கூட உண்டு.

அப்படிப்பட்ட சி.எஸ். ஜெயராமனின் குரலில் இடம்பெற்ற பாடல்கள் அனைத்துமே பிரபலமான பாடல்களாக அமைந்துவிட்டன.

குற்றாலத்தின் அழகையும், சிறப்புகளையும் பார்த்து ரசிக்க இரண்டு கண்கள் போதாதாம். ஆயிரம் கண்கள் வேண்டுமாம். இல்லை இல்லை. ஆயிரம் கண்களும் போதாதாம்! அப்படித்தான் மருதகாசி சொல்கிறார்.

"ஆயிரம் கண் போதாது
வண்ணக்கிளியே
குற்றால அழகை நாம் காண்பதற்கு
வண்ணக்கிளியே"

"மாண்ட்" - ராகத்தில் மகாதேவன் பாடலை அமைத்திருக்கும் விதமோ ஆயிரம் முறைகள் கேட்டாலும் சலிக்கவே சலிக்காதது.

இந்தப் பாடல் ஏ.பி. நாகராஜனின் மனதில் ஒரு அழுத்தமான இடத்தைப் பிடித்து விட்டதனால் தானோ என்னவோ பின்னாளில் தான் இயக்கிய "தில்லானா மோகனாம்பாள்" படத்தில் இந்தப் பாடலை அப்படியே நாதஸ்வரத்தில் வாசிக்கவைத்தும் பயன்படுத்திக்கொண்டார் அவர்.

அடுத்து "வண்ணத் தமிழ்ப் பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள்".

வசன நடையில் ஆரம்பித்து ஒவ்வொரு வார்த்தைகளாக கூட்டிக்கொண்டே ஆரம்பிக்கும் பல்லவி. ஒவ்வொருக்கு அடிக்கு பிறகும் பாடலாக உருமாறுகிறது.

பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள்
தமிழ்ப் பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள்.
வண்ணத் தமிழ்ப் பெண்ணொருத்தி என் எதிரில் வந்தாள். - என்று படிப்படியாக வார்த்தைகளைக் கூட்டிக்கொண்டே போகும்போது மகாதேவனின் கற்பனைத் திறனும் இசை ஆளுமையும் பிரமிக்க வைக்கிறது. சி.எஸ். ஜெயராமனுடன் ஹம்மிங்காக எல்.ஆர்.ஈஸ்வரி இணையும் பாடல் இது. சங்கராபரண ராகத்தை வெகு அற்புதமாக மகாதேவன் கையாண்டிருக்கிறார்.

"நீ சிரித்தால் நான் சிரிப்பேன் சிங்காரக்கண்ணே" - சூலமங்கலம் ராஜலக்ஷ்மியின் குரலில் அருமையான ஒரு குழந்தையைக் கொஞ்சிச் சீராட்டும் பாடல்.

இத்தனை பாடல்கள் இருந்தாலும் "பாவை விளக்கு" என்றதுமே நம் உதடுகள் தாமாகவே உச்சரிக்கும் பாடல் ஒன்று உண்டு. அது




"காவியமா நெஞ்சின் ஓவியமா அதன் ஜீவியமா தெய்வீகக் காதல் சின்னமா".

இந்தப் பாடலில் கே.வி. மகாதேவனின் திறமை - அவரது இசை ஆளுமை எல்லாமே உலக அதிசயமான தாஜ் மகாலுக்கு நிகராக நம்மை பிரமிக்க வைக்கிறது.

பல்லவியை சங்கராபரண ராகத்தின் அடிப்படையில் அமைத்தவர். பல்லவி. முடிந்தபிறகு வரும் சரணங்களுக்கு இடையிலான இணைப்பிசையிலும் தொடரும் சரண வரிகளிலும் அரேபிய இசைப் பிரயோகங்களை அற்புதமாக இணைத்திருக்கிறார். அதற்கு அவருக்கு கை கொடுத்த ராகம் "சரசாங்கி".

கர்நாடக இசையில் 27ஆவது மேளகர்த்தா ராகமான சரசாங்கி ஒரு சம்பூரணமான சுத்த மத்யம ராகம்.

முழுக்க முழுக்க இந்த மேளகர்த்தா ராகத்தை அரேபிய இசைக்கான ராகமாகப் பயன்படுத்தி பாடலை அமைத்திருக்கும் விதமும், அதனை சி.எஸ். ஜெயராமனும், பி. சுசீலாவும் பாடியிருக்கும் விதமும்.. வருணிக்க வார்த்தைகளே இல்லை.

அதுவும் "முகலாய சாம்ராஜ்ய தீபமே" என்று சுசீலா ஆரம்பிக்கும் அழகும், சரணத்தின் கடைசி வரிகளில் "என்றும் இன்பமே பொங்கும் வண்ணமே என்னைச் சொந்தம் கொண்ட தெய்வமே" - என்றும், "கனியில் ஊறிடும் சுவையை மீறிடும் இனிமை தருவது உண்மைக்காதலே" என்றும் பாடும் போது அவரது குரலில் வெளிப்படும் இனிமையும் உண்மையிலேயே காதுகளில் தேன் பாய்வது என்பார்களே அது இதைத்தானா என்று கேட்கத் தோன்றுகிறது.

மகாதேவனின் இசையில் சங்கராபரணமும், சரசாங்கியும் தான் எப்படி எல்லாம் மருதகாசியின் வரிகளுக்கு ஜீவன் தருகின்றன! உண்மையிலேயே இது ஒரு காவியப்பாடல் தான்.

அதே தீபாவளிக்கு மகாதேவனின் இசையில் வெளிவந்த இன்னொரு படம் தேவரின் "யானைப்பாகன்". உதயகுமார், சரோஜாதேவி நடித்த இந்தப் படத்தில் "பதினாறும் நிறையாத" என்ற டி.எம். சௌந்தரராஜனின் தனிப்பாடல். இனிமையாக மனதின் ஆழத்தை ஊடுருவிச் செல்லும்.

"செங்கனி வாய் திறந்து சிரித்திடுவாய்" என்ற டி.எம்.எஸ். - பி. சுசீலாவின் டூயட் அடிக்கடி சிலோன் வானொலியில் கேட்ட நினைவு.

ஆனால் "யானைப்பாகன்" படம் வந்த வேகத்திலேயே சுருண்டு போனது சின்னப்பா தேவருக்கு மிகப் பெரிய அடிதான்.

ஆனால் அவர் மனம் தளரவில்லை.

அடுத்த படத்துக்கான கதையைத் தயார் செய்து, காட்சிகளைச் சொல்லி கண்ணதாசனிடம் பாடல்களை எழுதி வாங்கி, கே.வி. மகாதேவனை இசையில் பாடல்களையும் தயார் செய்து கொண்டுவிட்டார்.

இனிமேல்தான் நடிக நடிகையரை ஒப்பந்தம் செய்தாக வேண்டும்!

யாரை ஹீரோவாகப் போட்டு படத்தை ஆரம்பிக்கலாம் என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த வேளை...

மகாதேவனின் பாடல்களே கதாநாயகரை இழுத்து வந்து அவரிடம் சேர்த்தன.

(தொடரும்)

நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்க பல உலக நாடுகள் தள்ளப்பட்டன. அதுவும் புலிகளை அம்பலப்படுத்தியது.

புலிகள் இதனை பொருட்படுத்தாது தொடர்ந்தும் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறினர். அரசைச் சார்ந்தவர்கள் தொடர்ந்தும் கொல்லப்பட்டு வந்தனர். போர் நிறுத்த கண்காணிப்பாளர்களுக்கு அறிவித்துவிட்டு ஆயுதமின்றி வட பகுதிக்குச் சென்ற 700 படை வீரர்களைக் கொண்ட கப்பல் ஒன்றைத் தாக்க முயற்சித்தனர்.

சில சந்தர்ப்பங்களில், போர் நிறுத்தக் கண்காணிப்பாளர்களே கடத்தப்பட்டனர். ஒரு சந்தர்ப்பத்தில் புலிகளின் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக, படகொன்றில் இருந்த போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள் கடலில் குதிக்க வேண்டியிருந்தது.

இது போன்ற சமபவங்களின் விளைவாகவே 2006ஆம் ஆண்டு கனடாவும் ஐரோப்பிய ஒன்றியமும் புலிகளை
தடை செய்தன. அதற்கு முன்னர் ராஜிவ் காந்தி கொலையை அடுத்து 1992இல் இந்தியாவும் இலங்கை மத்திய வங்கி மீதான தாக்குதலை அடுத்து 1996இல் அமெரிக்காவும் புலிகளை தடை செய்திருந்தன.

தமது தூதரகங்கள் மூலம் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கூறப்பட்டவற்றைப் போன்ற சம்பவங்களைப் பற்றி விசாரணை செய்து அவற்றின் அறிக்கைகளின் அடிப்படையில் புலிகளை தடை செய்யாது, வெறுமனே ஊடகங்களிலும் விக்கிபீடியா போன்ற இணையத் தளங்களிலும் வரும் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு புலிகளை தடை செய்தமையானது பொறுப்பற்ற செயல் என்பது தெளிவாகிறது.



# நோகடிக்கப்படும் நோபலின் நோக்கங்கள்...

கோவை நந்தன் கட்டுரையிலிருந்து.

இந்தியரான கைலாஷ் சத்யார்த்திக்கும் பாகிஸ்தான் சிறுமி மலாலாவுக்கும் இந்த ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு.

இந்தியா-பாகிஸ்தான், இந்து-முஸ்லீம் என புவியியல், மத பின்புலத்தைக் கொண்ட இவர்கள் இருவருக்கும் பரிசுகள் அறிவிக்கப்பட்டதில் நோர்வே பரிசுக்குழுவின் சுயநலமும் அடங்கி உள்ளது.

நோர்வே அரசின் வெளியுறவுக் கொள்கையை பகட்டாக காட்டிக் கொள்வதற்காகவும் மேற்குலகம் இஸ்லாமுக்கு எதிரி அல்ல என்று போலி வேடம் புனையவும், இந்தியாவும் எங்களுக்கு கனிவான நாடு என்று பொய்மையாய் காட்டிக் கொள்வதற்காகவும் செய்யப்பட்ட திட்டமிடலே இப்பரிசு அறிவிப்பு.

இப்பரிசுக்குழுவில் இடம்பெற்றிருக்கும் 5 பேரும் நோர்வே நாடாளுமன்றத்தின் முன்னைய உறுப்பினர்கள் மட்டுமல்ல இவர்கள் அனைவரும் முழுநேர அரசியல்வாதிகள். இவர்களின் நியமனம் பற்றி 2011 ஆம் ஆண்டிலேயே மிகப்பெரிய சர்ச்சைகள் வெடித்தன. உலகின் பல நாட்டு அறிஞர்களும் இதில் இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை நோபல் அறக்கட்டளையிடம் முன்வைக்கப்பட்டும் அது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை,

அமைதிக்கான நோபல் பரிசில் பல தடவை சர்ச்சைகள் வெடித்துள்ளன. ரஸ்யாவின் மிக்கேல் கோர்பசேவ், இஸ்ரேலின் இட்சாக் ரோபின் மற்றும் சிமோன் பெரஸ், பாலஸ்தீனத்தின் யாசர் அராபத், அமெரிக்காவின் ஹென்றி கிஸிங்கர், ஜிம்மி கார்ட்டர், அல் கோர், பராக் ஒபாமா... இப்படி பல தடவை பரிசுக்குழுவின் தேர்வுகள் கேள்விக்கு உள்ளாகி இருக்கிறது.

வியட்நாம் அதிபர் லி டக் தோ மற்றும் அமெரிக்க அதிபர் ஹென்றி கிஸ்ஸிங்கர் ஆகியோருக்கு அமைதிப் பரிசு அறிவிக்கப்பட்டபோது பரிசுக்குழுவில் இடம்பெற்றிருந்த 2 உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்து அக்குழுவிலிருந்து ராஜினாமா செய்ய முன்வந்தார்கள் என்பதும் வியட்நாம் தேசத்தில் அமைதி இன்னமும் முழுமையாக எட்டப்படவில்லை அதனால் இந்தப்பரிசு எனக்குத் தேவை இல்லை என்று லி டக் தோ பரிசைப் பெற்றுக் கொள்ள மறுத்திருந்ததும் வரலாறு.

அமைதிக்காக தம்மை அர்ப்பணித்த உலகின் பல மாமனிதர்களை இப்பரிசுக்குழு நிராகரித்துள்ளதும் வெளிப்படை. மகாத்மா காந்தி, அமெரிக்காவின் எலினார் ரூஸ்வெல்ட், பர்மாவின் யு தாண்ட், நைஜீரிய எழுத்தாளர் கென் சரோ முக்கியமானவர்கள்.

உலகத்தின் உன்னத மனிதர் மகாத்மா காந்தியின் பெயர் 1937, 1938, 1939, 1947 ஆகிய ஆண்டுகளில் அமைதிப் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டும் வழங்கப்படவில்லை என்பதும் அதற்காக காந்தியின் மரணத்தின் போது இப்பரிசுக்குழு பகிரங்க வருத்தம் தெரிவித்ததும் வரலாற்றின் பக்கங்கள்.

“காந்தி வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டார். நோபல் பரிசு மகாத்மா காந்திக்கு பெருமை அல்ல. அப்பரிசு காந்திக்கு கொடுக்கப்பட்டிருந்தால் அது நோபல் பரிசுக்குத்தான் பெருமை” என 2006-ல் இப்பரிசுக் குழுவின் செயலாளர் கெயிர் லூண்ட்ஸ்டெட் வருத்தத்துடன் தெரிவித்திருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கைலாஷ் சத்யார்த்திக்கு சர்வதேச குழந்தை தொழிலாளர் ஒழிப்பு விருதும், மலாலாவுக்கு சர்வதேச கல்வி விருதும் வழங்கி இருந்தால், எந்த விமர்சனமும் எழுந்திருக்காது.

ஆக தொடர்ந்தும் மேற்கின் நலன்கள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது இந்த வருடத்து உலக அமைதி விருதுத் தேர்வினூடாக மீண்டும் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

பரிசுக்குரியவர்களின் இரு நாட்டு மக்களும் பலவருடங்களாக அமைதியை தொலைத்துவிட்டு அலைந்து கொண்டேயிருக்க, இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது அமைதிக்கான நோபல் பரிசு.

எவ்வளவு முரணான உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் நாம்.....?

# யாழ் பல்கலைக்கழக உளவியல் கண்காட்சி

- எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி -

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல், உளவியல் துறையின் உளநல வார சிறப்பு உளவியல் கண்காட்சி ஒக்ரோபர் 15,16,17 ஆம் திகதிகளில் கலைப்பீட புதிய கட்டடத் தொகுதியில் துறைத்தலைவர் கலாநிதி



க.கஜவிந்தனின் நெறிப்படுத்தலில் நடைபெற்றது.

கண்காட்சியை யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் திறந்து வைத்தார். இறுதிநாள் நிகழ்வில் உளநலம் சஞ்சிகை வெளியீடு “ஓணான்” குறும்படக் காட்சி என்பனவும் இடம்பெற்றன.

உளவியல் என்பது நடத்தை பற்றியதும் அறிக்கை பற்றியதும் உடற் கூற்றியல் செய்முறைகள் பற்றியதுமான விஞ்ஞானமாகும். மேற்குறித்த விடயங்களை விளக்குவதாக இக்கண்காட்சி அமைந்திருந்தது. உளவியல் பாடப்பரப்பை முதன்முதலாக விளங்கிக் கொள்வோரும் பயினுறும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தமை இதன் சிறப்பம்சமாகும். துறையின் அனைத்து மாணவர்களதும் கடின உழைப்பு இக்கண்காட்சியின் வெற்றி எனலாம்.

சமூகத்தின் சகல மட்டத்தினரும் பயனுறும் வகையில் அமைந்த இக்கண்காட்சி ஒரு விழிப்புணர்வையும் ஏற்படுத்தியிருக்கின்றது. பார்வையாளர்களின் சந்தேகங்களுக்கு மாணவர்கள் சிறப்பான முறையில் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

விரிவுரை மண்டபங்களில் கற்றுக்கொண்ட விடயங்களை மேலும் தெளிவுபடுத்துவதற்கும் பல்கலை மாணவர்களுக்கு இக்காட்சிப்படுத்தல் உதவியிருக்கும். கண்காட்சியில் உள்ளடக்கப்பட்டி ருந்த விடயங்களாக, வாயில் கட்டுப்பாட்டுக் கொள்கை (Gate Control Theory), சிக்மன் பிரைட்டின் உள பாலியல் பருவங்கள் மற்றும் அறிகை உளவியல், மன-. 'தாயக்' கொள்கை, முழுநிலைக் காட்சிக் கொள்கை, நடத்தை வாதம், ஹார்மிக் கொள்கை, உளப்பகுப்புக் கொள்கை, தொழிற்பாட்டு வாதம், அமைப்பியல் வாதம் ஆகிய உளவியல் சிந்தனா கூடங்கள் பற்றிய விளக்கங்கள் காணப்பட்டன.

உளவியலாளர் B.F.Skinner இன் வாழ்க்கை வரலாறு தரப்பட்டிருந்ததோடு பண்புக்கொள்கையை முன்வைத்த Hensey senck மற்றும் Ivan Pavlov ஆகியோர் பற்றிய விளங்கங்களும் தரப்பட்டிருந்தன.

“போதை வ ஸ் து பாவனையில் இருந்து இளைஞர்களைக் காப்போம்” என்ற விழிப்புணர்வுப் பிரசாரம் காணப்பட்டது. அதனால் விளையும் தீமைகள் சொல்லப்பட்டிருந்தன.

இன்று பல்வேறு தரப்பினரையும் தாக்குகின்ற மன அழுத்தத்தின் அறிகுறிகள் அறிகை சார் அறிகுறிகள், மனவெழுச்சி சார் அறிகுறிகள், உடலியல் சார் அறிகுறிகள், நடத்தை சார் அறிகுறிகள் என்ற நான்கு வகைப்பாட்டின் கீழ் விளங்கப்படுத்தப்பட்டன.

மன அழுத்தம் உருவாவதற்கான காரணங்களும், மன அழுத்தத்தைத் தடுக்கும் வழிகளும் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன. பிரைட்டின் மனித மனம் பற்றிய பார்வைகள் விளக்கப்பட்டிருந்தன. Edward Thorndike இன் முயலல் தவறல் கற்றல் பரிசோதனை செய்து காட்டப்பட்டது.

நியம உளவியல், நியமமற்ற நடத்தைசார் உளவியல், கல்வி உளவியல், பிள்ளை வளர்ச்சி உளவியல், மிருக உளவியல், கைத்தொழில் உளவியல், வியாபார உளவியல், யுத்த உளவியல் போன்ற உளவியலின் பிரிவுகளுக்கு விளக்கம் தரப்பட்டது. நரம்புக்கலத் தாக்கம் எவ்வாறு மனித நடத்தையைப் பாதிக்கின்றது என்பதும் விளக்கப்பட்டது.

மாதிரி உளவளத்துணை நிலையம் ஒன்றும் செயற்பட்டது. உளவளத் துணை ஆலோசனையைப் பெற விரும்புபவர்கள் யாழ். பல்கலைக் கழகத்திலுள்ள சமுதாய வழிகாட்டல் மையத்துடன் தொடர்புகொள்ளலாம். மேலும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையிலுள்ள “நேயம்” நிலையத்துடன் 021 2226666 என்ற தொலைபேசி இலக்கத்துடன் 24 மணிநேரமும் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற விபரங்களையும் உளவளப் பிரிவில் அறிந்து கொள்ளமுடிந்தது.

மொத்தத்தில் ஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும், பொதுமக்களும் பயன்பெறும் வகையில் அமைந்த கண்காட்சி என்பதில் ஐயமில்லை.

# உடல் எடை குறைய...

★ இஞ்சிச் சாறுடன் சம அளவில் தேன் கலந்து கலக்கி காலையில் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும்.

★ கொள்ளை வேக வைத்து நீரை வடிகட்டி தினமும் குடிக்க வேண்டும்.

★ வாழைத்தண்டுச் சாறு, அறுகம்புல் சாறு, பூசணிச்சாறு இவற்றில் ஏதாவது ஒன்றை ஒருநாள் விட்டு ஒருநாள் குடிக்க வேண்டும்.

★ பப்பாசி, முள்ளங்கி, வாழைத்தண்டு, வெள்ளரி முதலியவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

★ எலுமிச்சம் பழச்சாற்றில் வேண்டிய அளவு தேன் கலந்து கலக்கி காலை, மாலை இரண்டு வேளை வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும்.

★ சிவப்பு நிற மாமிச வகைகள், வறுத்த உணவுகள், அதிகப்படியான உப்பு மற்றும் காரம், பதப்படுத்தப்பட்ட உணவுகள், போத்தலில் அடைக்கப்பட்ட குளிர்பானங்கள், கேக், பிஸ்கட், இனிப்புகள், முறுக்கு, நொறுக்குத் தீனி வகைகள், வெண்ணெய், நெய், கிரீம் வகைகளைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

★ தோல் நீக்காத பயறு. வகைகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வது நல்லது.

★ முட்டையின் மஞ்சள் கருவைத் தவிர்க்கவும் - வெள்ளைக் கருவை உண்ணலாம்.

★ தேநீர், கோப்பியைக் குறைக்கவும்.

★ வெண்ணெய் நீக்கிய மோர், இளநீர், சீனி சேர்க்காத பழரசங்கள் பருகலாம்.


★ தினமும் ஒரு கீரையைச் சாப்பாட்டில் சேர்க்கவும்.

★ முளைகட்டிய ராகியைக் கஞ்சி ஆக்கி குடிக்கவும்.

(ஆதாரம்: 200 கை மருந்துக் குறிப்புகள்)



# மருத நில மகிமை பெற்ற வட்டக்கச்சி மண்



கிளிநொச்சி வட்டக்கச்சி சிறீ ரங்கநாதப்பெருமாள் பக்தர்களின் நிகழ்வுகள்



வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி அருள்மிகு கந்தசாமி கோவில் கும்பாபிஷேக நிகழ்வு

## அமைவிடம்

இலங்கையின் மத்திய நகரமான கண்டியையும், யாழ்ப் பாணத்தையும் இணைப்பது ஏ-9 நெடுஞ்சாலை. இந் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரு முக்கிய நகர் கிளி நொச்சி ஆகும். இந்நகருக்கு கிழக்கே 7 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது வட்டக்கச்சி. மருதம், முல்லை, பாலை, நெய்தல், குறிஞ்சி எனப்படுகின்ற ஐவகை நிலங்களிலே மருத நிலம் வளம் நிறைந்த பூமி கிளிநொச்சி. கிளிநொச்சியின் தலைசிறந்த விவசாய கிராமங்களில் ஒன்றுதான் வட்டக்கச்சி. பார்க்குமிடமெல்லாம் தென்னந் தோப்புகள், மா,பலா,வாழை எனும் முக்கனி தரும் மரங்கள், வயல்நிலங்கள்,அவற்றிற்கு இடையே வளைந்தோடும் வாய்க்கால்கள்,சிறுசிறு நீர்த்தேக்கங்கள், அழகிய மலர்கள், தேடிவந்து அதிலமரும் வண்டினங்கள், வீதிகளில் ஒய்யாரமாய் பவனிவரும் கால்நடைகள், என்று ஒட்டு மொத்த அழகையும் ஒன்றாக்கி வட்டக்கச்சி எங்கும் பசுமைத்தோல் போர்த்தி வைத்திருக்கிறாள் பூமித்தாய் எந்நேரமும் அவரவர் வேலையில் சுறுசுறுப்பாக இருக்கும் மக்கள், மாணவர்கள், அமைதியான சூழல்,இயற்கையான காற்று என்று பார்ப்பவர மனங்கவரும் ஒரு சொர்க்க பூமியாகவே திகழ்கிறது வட்டக்கச்சி.

## கல்வி

இங்கு வாழும் மக்களின் பிரதான தொழில் வேளாண்மையாக இருந்தபோதிலும் அனைவருமே கல்விகற்பதில் ஆர்வமும், அறிவுத்தேடலும் உடையவர்களாவர். மாவட்ட ரீதியில் வெளிவரும் புள்ளிவிபரங்களை எடுத்து நோக்கும் போது, இப்பிரதேச மாணவர்களே அரச பொதுப் பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்று தொடர்ந்து சாதனை படைத்து வருகின்றனர்.

### இங்குள்ள பாடசாலைகள்:

இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை, கிளிநொச்சி
கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி
கிளி/வட் டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை.

## வேளாண்மை

வட்டக்கச்சி மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். இங்கு இருபோக நெற்செய்கை (சிறுபோகம், பெரும்போகம்) நடைபெறுகிறது. தெங்குப் பயிர்ச்செய்கையும் இங்கு முக்கிய மானது. கால்நடை வளர்ப்பும், வீட்டுத்தோட்ட பயிர்செய்கையும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. இங்கு நடை பெறும் சிறுபோக நெற்செய்கை இலங்கையின் மூன்றா வது பெரிய நீர்த் தேக்கம் என்று கூறப்படும் இரணைமடு நீர்த்தேக் கத்திலிருந்து செய்யப்படும் நீர்ப்பாசனத்தின் மூலமும், பெரும் போக நெற்செய்கை மழையை நம்பியும் மேற்கொள்ளப் படுகின்றது.

## பண்பாடு

இங்கு உள்ள மக்கள் இந்து, கிறிஸ்வம் ஆகிய சமயங்களைப் பின்பற்றுகின்றனர். இந்துக்களே பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இஸ்லாமியர்களும் வசித்துள்ளனர். 1990 ஒக்ரோபரில் இங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் சில அசாதாரண அரசியல் காரணங்களால் இலங்கையின் பிறபகுதிகளுக்கு குறிப்பாக தென்னிலங்கைக்கு இடம் பெயர்த்தப்பட்டனர்.







ஜனாதிபதியையும் அபிவிருத்தியையும் வரவேற்கும் மக்கள்



ஆசிரியர் திருமதி கமலாவதி சந்திரகாந்தன் நினைவாக கிளிநொச்சி உருத்திரபுரம் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து நடாத்திய கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாபெரும் உதை பந்தாட்ட இறுதிப்போட்டியில் வட்டக்கச்சி ம. வி வெற்றிபெற்று ஆசிரியர் அமரர் திருமதி கமலாவதி சந்திரகாந்தன் நினைவுக்கிண்ணத்தை தனதாக்கியது.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்ட வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூடம்



திவிநெகும வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் சுய தொழில் முயற்சிக்கான திட்டம்



கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஜே/350 கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. (18)

# முல்லையில் நிறைவடைந்தது காணாமற்போனோர் விசாரணை

ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட காணமற் போனோர் விசாரணைக்குழுவின் விசாரனை 2 ஆம் கட்டமாக முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜனாதிபதியினால் அமைக்கப்பட்ட காணாமற்போனோர் விசாரனைக்குழுவில் உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் மக்ஸ்வெல் பரணகம தலைமையிலான விசாரனைக்குழுவின் முதல் நாள் விசாரணை கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவில் காலை 9.00-5.00 வரை இடம்பெற்றுள்ளது. இதில் 57 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 44 பேர் மட்டுமே ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்துள்ளனர்.புதிதாக 18 பேர் முறைப்பாடுகளைப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 3ஆம் திகதி காலை 9.00. -5.00 வரை இடம் பெற்ற விசாரணையில் 57 பேர் அழைகக்கப்பட்ட நிலையில் 38 பேர் மட்டுமே ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்துள்ளனர்.அந்த வகையில் விடுதலைப்புலிகளால் 21 பேரும் இராணுவத்தினால் 18 பேரும் புதிதாக 64 பேரும் முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவில் 4ஆம் திகதி இடம் பெற்ற விசாரணையில் 67 பேர் அழைக்கப்பட்ட நிலையில், ஆணைக்குழு வுக்கு முன்பாக 60 பேர் சாட்சியம் அளித்துள்ளனர். அந்த வகையில் விடுதலைப்புலிகளினால் 25 பேரும் இராணுவத்தினரால் 20 பேரும் இனம் தெரியாதவர்களினால் 14 பேரும் காணாமற்போக செய்யபட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். புதிதாக 50 பேர் விசாரணைகளைப் பதிவு செய்துள்ளனர்.


5ஆம் திகதி இடம் பெற்ற விசாரணையில் 49 பேர் அழைக்கப்பட்ட நிலையில் 39 பேர் விசாரணைக்குழுவுக்கு முன்னால் சாட்சியம் அளித்துள்ளனர். புதிதாக 34 பேர் சாட்சியம் அளிததுள்ளனர் அந்த வகையில் விடுதலைப்புலிகளால் 25 பேரும் இராணுவத்தினால் 7 பேரும் இனம் தெரியாதவரினால் 09 பேரும் காணாமற்போக செய்யபபட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## நினைவுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தோழர் சி. நவரத்தினத்தின் 10 ஆவது வருட நினைவுக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு திருநெல்வேலி கலைமகள் சனசமூக நிலைய மண்டபத்தில் வீ மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வெள்ளி நற்சிந்தனை...



# குரு சேவை

கோதாவரி நதிக்கரையில் ஓர் ஆசிரமத்தில் வேத தர்மன் என்ற ஒரு குரு இருந்தார் அவருக்கு பல சீடர்கள் இருந்தார்கள்.

ஒரு நாள் குருஎல்லாச் சீடர்களையும் அழைத்து ‘‘நான் போன பிறவியில் எத்தனையோ பாவங்களைச் செய்துள்ளேன். என தவத்தினால் இந்தப் பாவங்கள் எவ்வளவோ அழிந்து விட்டன. இருந்தும் இன்னும் சிறிது மீதி இருக்கின்றது. இந்தப் பாவங்களின் பலனை நான் இந்தப் பிறவியில் அனுபவிக்கா விட்டால் இன்னொரு பிறவியில் நான் அனுபவிக்க வேண்டும். ஆகவே காசிக்குச் சென்று இந்தப் பாவ பலனை அனுபவிக்கப் போகிறேன். அப்பொழுது என்னைக் கவனிததுக் கொள்ளவும், பணிவிடை செய்யவும் ஒரு சிஷ்யன் தேவை. யார் தயாராக இருக்கிறீர்கள் எனக் கேட்டார்.

அப்பொழுது ‘சாந்தீபகன்’ என்ற சிஷ்யன் மட்டும் எழுந்து நின்று குருவே என்ன செய்ய வேண்டும் நான் தயார் என்றான”

“நான் இருபத்தொரு ஆண்டுகள் குருடனாகவும், நொண்டியாகவும், குஷ்டரோகியாகவும் இருப்பேன். உன்னால் எனக்கு பணிவிடை செய்ய முடியுமா? என்று கேட்டார்.

“குருவே! நீங்கள் கவலைப் பட வேண்டாம்”நான் உங்களைக் கவனித்துக் கொளகிறேன். எப்படியாவது உங்கள் பாவங்கள் உங்களைவிட்டு விலகினால் போதும்” என்றான்.

குரு காசியில் விசுவேஸ்வரைத் தரிசனம் செய்து குருடராகவும், நொண்டியாகவும், குஷ்டரோகியாகவும் மாறினார் சாந்தீபகன் குருவை நல்ல முறையில் கவனித்து வந்தான் .நோயின கடுமையால் குரு சாந்தீபகனை கழத்து பேசி வந்தார். ஆனால் இவனோ எதையும் பொருட்படுத்தாமல் குரு சேவை செய்து வந்தான்.

இதைக் கண்டு மகிழ்ந்த காசி விசுவநாதர் சாந்தீபகன் முன் தோன்றி “உனக்கு என்ன வரம் வேண்டும். கேள் தருகிறேன்”. என்றார். “குருவின் உத்தரவு இல்லாமல் நான் ஒரு வரமும் கேட்பமாட்டேன். இதோ நான் குருவைக் கேட்டு விட்டு வருகிறேன். ”என்று குருவிடம் சென்றான்.

“காசி விசுவநாதர் எனக்கு என்ன வரம் வேணடும். என்று கேட்கிறார் நீங்கள் முன்பு போல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும் என்று கேட்கட்டுமா?” என்று கேட்டான்.

“அடமடையா! என் உடல் குணமானால் என் பாவம் தொலையாது” என்றார்.

“குரு ஒரு வரமும் தேவையில்லை என்று சொல்கிறார்” என வந்து சொன்னான்.

“நீ குருவுக்குச் செய்யும் தொண்டு எனக்குச செய்யும் தொண்டாகும். நீ உன் வாழ்வில் உயர் நிலையடைவாய் ”என காசி விசுவநாதர் வாழ்த்தினார்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

இணையத்தில் எழுதுவதில் உள்ள பிரச்சினை இதுதான். அந்தச் சமயத்தில் இருக்கிற மனநிலைக்கேற்றவாறு எதையாவது எழுதி அதன் political correctness பற்றியோ sensibility பற்றியோ எதையும் யோசிக்காமல் அப்படியே பிரசுரித்து விடுவது. ‘சூப்பர் தல’ என்று வரும் பின்னூட்டங்களும் லைக்குகளும் வேறு போதையை ஏற்றி விடுகிறது. வாக்கிய அமைப்புகள், கருத்து மற்றும் எழுத்துப் பிழைகள் பற்றிக் கூட யோசிக்காமல் அப்படியே பிரசுரித்து விடுவது இணையத்தில் மாத்திரம் எழுதுவதில் உள்ள ஆபத்துக்களில் ஒன்று.

அச்சு இதழ்களில் மாத்திரம் எழுதும் பழைய எழுத்தாளர்களின் படைப்புகளை வாசித்துப் பாருங்கள். அதில் இருக்கும் நிதானம், இணையத்தில் எழுதுபவர்களுக்கு இருக்காது. ஜெட்வேகம்தான். யாரும்எடிட் செய்யும் அவசியமில்லை. கேள்வி கேட்கவும் யாருமில்லை எனும் போது குளிர் விட்டுப் போகிறது.

நான் மதிப்பு கொண்டிருக்கும் நண்பர்கள் கூட முகநூலில் என்னிடமிருந்து unfriend செய்திருப்பதை கவனித் தேன். நான் எழுதுபவைகளோடு உங்களுக்கு உடன்பாடு இல்லாமலிருக்கலாம். அவை எரிச்சல் மூட்டலாம். நீங்கள் மதிப்பு கொண்டிருக்கும் விஷயங்களின் மீது விமர்சனம் வைத்திருக்கலாம். அவமரியாதையாக சீண்டும்படி கூட எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் இவையெல்லாம் கருத்து சார்ந்த வேறுபாடுகள்தான். ஆனால் ஒரு சக மனிதனாக இந்தக் காரணங்களுக்காக எல்லாம் விலகிப் போக தேவையில்லை என்பது பணிவான கருத்து.

நட்பை விலக்கிக் கொள்ளும் உங்களின் முடிவு மீது கொண்ட அதீத மரியாதையுடன் கூடவே இந்த வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். நட்புகளை இழந்து விட்டு கருத்துகளில் மாத்திரம் ஜெயிப்பதில் எப்போதுமே எனக்கு விருப்பம் இருந்ததில்லை. ஆகவே... – **சுரேஷ் கண்ணன்**

காலையிலிருந்து மழை கொட்டுகிறது. இன்று காலை ஒரு நண்பர் அவராக எனக்கு போன் செய்தார். ஒரு வருடத்துக்கு முன்பு ஒரு மழை நாளில் எங்கள் நட்பில் சிறு விரிசல் விழுந்தது. அதற்கு பிறகு நாங்கள் பொது இடங்களில் சந்தித்துக் கொண்டாலும் அவ்வளவாக எதுவும் பேசிக் கொண்டதில்லை. சம்பிரதாயமாக கைகுலுக்கிக் கொள்வோம்.

கடந்த ஒரு வருடமாக நேரம் கிடைக்கும் போதெல்லாம் என்னை திட்டுபவர் அந்த நண்பர். நான் அவரை அதற்கு மேல் திட்டுவேன். இன்று அவராக போன் செய்து அழைக்கிறார். மழையை போன்று மனிதர்களும் எவ்வளவு விசித்திர மானவர்கள். போன் செய்த நண்பர் வீட்டுக்கு வாங்க என்று அழைத்தார். தயக்கமாக இருக்கிறது. வெளியில் நல்ல மழை. எங்கள் அலுவலகத்தின் இரண்டாவது மாடி ஜன்னல் கண்ணாடி வழியாக மழை நீர் வழிகிறது. மங்கலான கண்ணாடி வெளியே தெரியும் கலங்கலான காட்சிகளை வெகுநேரமாக பார்த்து கொண்டு நிற்கிறேன்.

நான் படத்தில் வரும் இந்த பாடல் வரிகள் ஏனோ மனதுக்குள் ஒழுகிக்கொண்டே இருக்கிறது

“உலகினில் மிக உயரம் மனிதனின் சிறு இதயம், நினைவுகள் பல சுமக்கும் நிஜத்தினில் எது நடக்கும்?”

– **விநாயக முருகன்**

தன்முனைப்பும், தற்பெருமையும் கொண்ட தன்னைப்பற்றி மட்டுமே பேசவேண்டும், தன்னைத் தவிர எதுவும் இவ்வுலகில் இல்லை, தான் மட்டுமே இந்த பிரபஞ்ச மையம், தனக்குத்தெரிந்ததை தாண்டி உலகில் ஏதுமில்லை என்கிற தமிழின் குறிப்பாக தமிழ் தற்கால இலக்கியவாதிகளாக கருதிக்கொள்பவர்கள் வைத்துக்கொண்டுள்ள தன்னகங்காரத்திற்கு எதிராக இலக்கிய ஜனநாயகம் என்றால் மாற்றுக் கருத்திற்கான இடத்தை தருதல் என்கிற பன்மிய ஜனநாயகவாதியாக திகழ்ந்தவர் தேஜகா. தனக்குப் புரியவில்லை அல்லது தனது நிலைப்பாடுகளைத் தாண்டியவை அல்லது தனது கருத்தியலுக்கு எதிரானவை என்று பாகுபாடு பார்த்து ஒதுக்காமல் எல்லாவற்றிற்கும், எல்லாக் கருத்திற்கும் இடம் தரும் பன்மை நோக்கைக் கொண்ட ஒரு கலை இலக்கிய ஜனநாயக வாதிக்கு சிறந்த உதாரணம் தேஜகா. அவர் எவ்வளவு ஆழந்த வாசிப்பு கொண்டிருந்தாலும், எங்களை மாணவராக ஒதுக்காமல் சமமாக பாவித்து உரையாடவும், நாங்கள் சொல்வதை காது கொடுத்து கேட்பதும், அதை புரிந்துகொள்ள முயல்வதும் என்கிற தமிழில் இல்லாத தன்முனைப்பற்ற ஒரு பன்மைய பார்வையும் சிந்தனையும் கொண்டவர். அவரது இழப்பு கலை விமர்சனத்துறைக்கு ஒரு பேரிழப்புதான்.

– **ஜமாலன்**

# மாணவரின் மனவடுக்களை அகற்ற உளரீதியான ஆற்றுப்படுத்தல் அவசியம்

## சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தெரிவிப்பு



மாணவர்கள் கல்வியில் ஆர்வம் செலுத்த ஆரோக்கிமான உடல் நிலை, ஆரோக்கியமான உளநிலை என்பன இருத்தல் வேண்டும். மாணவர்களுடைய வீட்டுச் சூழல், பொருளாதாரச் சூழல், சமூகச் சூழல் என்பன மாணவர்களின் கல்வியில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக அமைந்துள்ளன.

மன வடுக்களைச் சுமந்து நிற்கும் மாணவர்களுக்கு உள ரீதியான ஆற்றுப் படுத்தல்கள் அவசியம் தேவை. இவ்வாறு தெரிவித்தார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் ஓய்வு நிலை விரிவுரையாளரும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் உதவிப் பணிப்பாளருமான சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்.

வயாவிளான் மத்திய கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா கடந்த ஞாயிறுக்கிழமை கல்லூரியின் ஆ.சி.நடராஜா அரங்கில் அதிபர் வி.ரி.ஜயந்தன் தலைமையில் இடம்பெற்றபோது கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வருடாவருடம் பட்ஜெட்டில் மதுபானம, சிகரெட்டின் விலை எகிறுகிறது. அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் தான் அதிகமான பியர் விற்பனையாகிறது என்கிற செய்தி அதிர்ச்சியூட்டுவதாயுள்ளது.

இன்றைய இளசுகள் மதுப் பாவனையால் தங்களையும் அழித்துத் தங்கள் குடும்பத்தையும், சமூகத்தையும் அழிக்கிறார்கள். இவ்வாறான செயற்பாட்டில் நாம் ஒருநாளைக்கு எவ்வளவு பணத்தைச் செலவிடுகிறோம்? ஒரு மாதத்தில் எத்தனை ரூபா பணத்தைச் செலவிடுகிறோம்? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மதுப் பாவனையால் பணத்தை, உடல் ஆரோக்கியத்தை மட்டுமா எங்கள் சுய கௌரவத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

எங்கள் உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய இவ்வாறான தீய பழக்கங்களை அறவே ஒதுக்கவேண்டும் மது, சிகரட் பாவனையை வாழ்க்கை முழுவதும் பழக்கமாகக் கொள்ளாதிருக்க இளம் வயதிலேயே நாம் சத்தியப் பிராமணம் எடுக்க வேண்டும்.

நாளைய சமூகத்தை ஆளப் போகும் இன்றைய மாணவ சமூதாயத்திடம் இது தொடர்பான போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு கல்விச் சமூகத்தவர்களுடையது.

தற்போதைய காலகட்டத்தில் பாடசாலைகளில் அதிபர் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மாணவர் வரவு ஒழுங்கு தலையாயது. மாணவர்களின் கல்வியில் பாடசாலைச் சமூகத்தை விடப் பெற்றோர்கள் கூடிய அக்கறை எடுக்க வேண்டும். தற்காலத்தில் அதிகமான வீடுகளில் பெற்றோர்கள் எந்நேரமும் தொலைகாட்சித் தொடர்களில் மூழ்கியிருக்கிறார்கள்.

இதன் காரணமாக உங்கள் பிள்ளைகளின் ஒளிமயமான எதிர்காலத்தை இருளாக்கி விடாதீர்கள். பெற்றோர்கள் மாணவர்களின் ஒழுங்கு தொடர்பில் மிகுந்த கரிசனை செலுத்தவேண்டும்.

அத்துடன் பாடசாலைச் சூழல், வகுப்பறைச்சூழல் என்பன கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும். மாணவர்களின் பிரச்சினைகளை ஆசிரியர்கள் கவனமாகக் கையாள வேண்டும். மாணவன் அல்லது மாணவியின தனிப்பட்ட குறைநிறைகளை சுட்டிக்காட்டும் போது ஆசிரியர்கள் மிகவும் அவதானமாக செயற்படவேண்டும் ஆசிரியத் தொழில இந்த உலகத்தில் செய்யப்படும் தொழில்களில் உயர்வானது. உன்னதமானது. ஒரு நல்லாசான் இறந்த பின்னும் கூட சந்ததி சந்ததியாக தான் கற்பித்த மாணவ மனங்களில் அழியாமல் நிலைத்து நிற்பான்.

அன்பினால் தான் நாம் எதனையும் சாதிக்க முடியும். அதிகாரத்தால் நாம் நினைப்பவையெல்லாவற்றையும் சாதிக்க முடியாது. இந்தக் கூற்றை ஆசிரியர்களும் நன்கு உணர்ந்து செயற்பட்டால் சமூகத்திற்குப் பயனுள்ள மாணவ சமூதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும் என்றார.

## பல்கலை மாணவர்களுக்கு எயிட்ஸ் விழிப்புணர்வு



எச்.ஐ.வி மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தும் வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத் துவப் பயிற்சியின் போதே, இந்த வேலைத் திட்டமும் முன்னெடுக்கப்பட வுள்ளதாக, பாலியல் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி எயிட்ஸ் ஒழிப்புப் பிரிவு வைத்தியர் சிசிர லியனகே தெரிவித்துள்ளார்.

உயர் கல்வி அமைச்சுடன் இணைந்து இந்த வருடம் முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதேவேளை, பாடசாலைகளிலும் சிரேஷ்ட மாணவர்களுக்கு எயிட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் தொடர்பான தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக வைத்தியர் சிசிர லியனகே கூறியுள்ளார்.

இதன்படி கல்வி அமைச்சுடன் இணைந்து இதற்கான ஆரம்ப வேலை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டு முதல் இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக சிசிர லியனகே மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மத அமைப்பு குற்றச்சாட்டு விசாரணைகள் ஆரம்பம்

இலங்கையில் இராணுவ ஆட்சி நிலவி வருவதாகீ மத அமைப்பு ஒன்று குற்றம் சுமத்தியமை குறித்து விசாரணை நடாத்தப்படவுள்ளது.

குறிப்பிட்ட ஓர் மத அமைப்பு இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்துள்ளது.

இலங்கையில் இராணுவ ஆட்சிமுறை நிர்வாகம் மேற்கொள்ளப்படுவதாகவும், இதனால் மக்களின் உரிமைகள் முடக்கப்படுவதாகவும் இந்த மத அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

இராணுவ ஆட்சியினால் ஏற்படும் பாதக விளைவுகள் குறித்து விபரிக்கும் துண்டுப் பிரசுரங்களையும் இந்த அமைப்பு கடந்த வாரம் மக்களுக்கு விநியோகித்துள்ளது.

இராணுவ மயப்படுத்தலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறித்த துண்டுப்பிரசுரத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் பின்னணி தொடர்பில் பாதுகாப்பு தரப்பினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையில் இராணுவ ஆட்சி நிலவவில்லை எனவும், இந்த துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் முற்றிலும் பொய்யானவை எனவும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கிறிஸ்தவ தேவாலயமொன்றின் நிர்வாகத்தினர் இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

## மருதனார் மடத்தில் பால்மாக்கள் திருட்டு

(சுன்னாகம்)

கொட்டும் மழையை சாதகமாகப் பயன்படுத்திய திருடர்கள் சுன்னாகம் மருதனார்மடம் சந்தியில் உள்ள கடை ஒன்றின் களஞ்சியத்தை உடைத்து சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான பால் மாவகைகளை திருடிச் சென்றனர் எனக் கூறப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஆண்டிலும் இத்தகைய திருட்டு சம்பவங்கள் தொடர்ந்து சில கடைகளில் இடம்பெற்ற நிலையில் மீண்டும் தற்போது ஆரம்பமாகியுள்ளதாக வர்த்தகர்கள் கவலை வெளியிட்டனர்.

மருதனார்மடம் சந்தியில் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள களஞ்சியமாக பயன்படுத்தப்பட்ட வீட்டின் ஓட்டைப் பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்த பால் மா வகைகளை திருடிக்கொண்டு வீட்டின் முன் கதவைத்திறந்து வெளியேறியிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் குறித்து சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

## வவுனிக்குளம் புனரமைப்பால் மேலதிக காலபோக நெற்செய்கை

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம் புனரமைக்கப்பட்டமையால் இம்முறை காலபோகத்தில் அதன் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வவுனிக்குள நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவித்தார். இதுவரையில் வவுனிக்குளம் புனரமைக்கப்படாமல் இருந்தமையால் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால்களும் சேதமடைந்து காணப்பட்டன. இதனால், 4 ஆயிரம் ஏக்கரில் மாத்திரம் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நெற்செய்கை மேற்கொள்ளக்கூடிய 2 ஆயிரம் ஏக்கர்வரை நெற்செய்கை மேற்கொள்ளப்படாமல் இருந்தது. இந்நிலையில், முரண்பாடுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 600 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் 2013ஆம் ஆண்டு வவுனிக்குள புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னர் 24 அடி கொள்ளளவை கொண்டதாக இருந்த வவுனிக்குளம், தற்போது 25 அடி நீரை கொள்ளக்கூடியதாக புனரமைக்கப்பட்டுள்ளது. அத்துடன், குளத்தின் வாய்க்கால்களும் சீரான முறையில் புனரமைக்கப்பட்டுள்ளன. அணைக்கட்டு, வான்பகுதி என்பன உயர்த்துதல், நீர் விநியோக வாய்க்கால்கள் புனரமைத்தல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

புனரமைப்பு பணிகள் இந்த வருட ஆரம்பத்தில் முழுவதுமாக முடிவடைந்தன. இதன் பின்னர், தற்போது மேலதிகமாக 2060 ஏக்கரில் கூடுதலான நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதன் மூலம், முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 2100 விவசாய குடும்பங்கள் பயனடைவார்கள் என பொறியியலாளர் மேலும் தெரிவித்தார்.

## பரமர் சங்கமம்



'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பேய் என்டும்சொன்னவை. அதிலோர் உண்மை இருக்கத்தான் செய்யுது. ஏனெண்டால் பயமென்பதும் பீதிதானே. பீதி வந்தால் ஆவி வந்தேக்குச் சரி.

ஆவியெண்டால் புட்டியப்பம் அவிக்கிறே இல்லாட்டி ரயில் விமானம் ஓடுறே நீராவியோ, எரிபொருளாவியோ எண்டு நினையாதேங்க! ஆக்களின்ரை உடலில் இருந்து உயிர்ப்பிரியேக்கே வெளியேறுற ஆவி.

இப்படி நான் சொல்லுறதை வாசிக்கிறவைக்கே பயம் வந்து தொற்றிக் கொள்ளுமெணடால் கண்டதுக்கும் மருளுறவனுக்கு எப்படி இருக்கும்? பரமரென்ன பெரிசாப் பீடிகை விடுறாரெண்டு நீங்க நினைக்கிறே விளங்குது. உங்கடை ஆவலை நீடிக்க விடாமல் விசயத்துக்கு வாறன்.

டிசம்பர் மாதம் 16 ஆம் திகதியில் இருந்து 22 ஆம் திகதி வரையான ஆறு நாட்களுக்கும் உலகமெலாம் இருளப்போகுதெண்டு நாசா நிறுவனம் அறிவிச்சேண்டு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டதைப் பாத்தா சனங்களுக்கு மற்றொரு இடியோறு பிடிச்சிருக்கு. இப்படிக் காலத்துக்குக் காலம் ஏதாவதைச் சொல்லி சனங்களைக் கலக்கிறதே வேடிக்கையாப் போச்சு.


10-10-10 இல், 11-11-11 இல், 12-12-12 இல் இப்படி ஒரிலக்கங்கள் ஒண்டாவந்த தினங்களிலும் ஏதோ ஒரு வாயிலும் புரித்தில்லை அந்தக் கலண்டரில் போட்டிருக்கு உலகம் அழியுமெண்டும் சனங்கள் அந்தக் கண்டமெல்லாம் கழிஞ்சு. நிலத்தடி நீரில் மலக்கழிவு... அதால ஐஸ்கிறீம்களில் உயிர்க்கொல்லி வைரசெண்டாங்கள்.

இப்ப ஆறு நாள் இருட்டா இருக்கப்போகுது எண்ணுறாங்கள்... இப்படி எங்களை இந்த உலகத்தில் வாழுற நாளுகளை எண்ண வைக்கிறாங்கள்... அதுதான் ஒவ்வொரு இரவும் போலை கரண்டில் காலத்தைக் கழிக்கலா மெண் டால் கரண்ட் கட்டானால்... யோசிக்கவே பயமாத்தான் கிடக்கு.

ஏனெண்டால் பட்டப்பகலிலேம் இரவிலேம் வாள், கத்தி, பொல்லுகளோடை வந்து வீடு வீடா கொள்ளை அடிக்கிற கோஷ்டி சும்மாவே இருக்கும். இந்தச் செய்தி அவேன்ர காட்டிலை நல்ல மழையைத்தானே குடுக்கும். இப்பவே திட்டம் போட்டிடுவாங்கள் நகை சனங்களை எங்கை பங்கர் தோண்டி வைச்சாலும் காட்டடாவெண்டு எடுத்திடுவாங்கள்.

நாசமாய் போன நாசா தன்ரை வாயை மூடிக்கொண்டிருந்திருக்கலாம். 2012 டிலும் உலகம் அழியப்போகுதெண்டு வேற்றுக் கிரகங்களில் குடியேற விரும்புறவை விமான மற்றும் றொக்கட் பிரயாணத்துக்குப் பதிவு மேற்கொள்ளச் சொல்லியும் புரளி விட்டிச்சினம். வாய்க்கேல்ல இப்ப இருட்டில் கொள்ளை அடிக்கலாமெண்டு பாக்கினம் போலை.

பயந்தால் எங்கேம் வாளேலாது. வீட்டுக்கை இருந்தவன் வீடு உடைஞ்சு விழுந்திடுமே எண்டு வெளியிலை ஓடி வந்தானாம். பிறகு வானம் உடைஞ்சு வீழ்ந்தாலெண்டு பதகளித்த மாதிரி மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயெண்டு கருதி வாழக்கூடாது... என்ன நான் சொல்லுறே...

2. 


தரப்பட்ட தளவடிவங்களைப் பயன்படுத்தி ஆக்கக்கூடிய திண்மப் பொருளின் பெயரை எழுதுக?..........................


3. 750 கிராம் பருப்பின் விலை 126 ரூபா எனின் 500 கிராம் பருப்பின் விலை என்ன?
ரூ......................


4. 150 நிமிடம் உன்பதை மணித்தியாலம் நிமிடம் என்பவற்றில் எழுதுக?
........................ மணி.................. நிமிடம்

**06.** கீழே தரப்பட்ட உருக்களின் தமிழ்ப் பெயர்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக


______________________


______________________


______________________


______________________


______________________


______________________

**07.** பின்வரும் சொற்களை ஒழுங்கமைத்து எழுதுவதன் மூலம் சரியான கருத்தைப் புலப்படுத்தும் வாக்கியத்தை எழுத்துப் பிழையின்றி எழுதுக

1. மரங்கள் / தருகின்றன / தூய / எமக்கு / காற்றை
............................................................

2. இலகுபடுத்துவதற்காக / மனிதன் / பயன்படுத்துகிறான் / வேலைகளை / பொறிகளை / எளிய
............................................................

**08.** பின்வரும் பழமொழிகளில் விடுபட்ட இடங்களைச் சரியான சொற்களைக் கொண்டு பூர்த்திசெய்க

1. பணம் பந்தியிலே குணம் ........................
2. ............................ அழகு முகத்தில் தெரியும்
3. எறும்பும் தன் கையால் ...................... சாண்

**09.** நான் பாடசாலை விட்டு மேலதிக வகுப்புக்களையும் முடித்து மாலை வேளையில் பாதையோரமாக நடத்து வந்து கொண்டிருந்தேன். பாதையில் வேகவேகமாகப் வாகனங்கள் விரைந்து கொண்டிருந்தன. ஒரு குட்டித் தம்பி தன்னந்தனியே அநுதவாறு எனக்கு முன்னால் தத்தித் தத்தி வந்து கொண்டிருந்தான் ...... இவ்வுரையைப்பகுதியைத் தொடர்வதற்கு சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாமல் ஐந்து வாக்கியங்கள் எழுதுக)

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் -4 பரீட்சை முன்னோடி- 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



1. ● பின்வரும் உரைப்பந்தியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக

இயற்கையழகும் வரலாற்றுப் பெருமதியும் கொண்ட இலங்கையிலே இருக்கும் நகரங்களின் செங்கடகல எனும் பெயரால் அழைக்கப்பட்ட கண்டி நகரம் மிகவும் பிரசித்தி பெற்றது. இலங்கையின் கடைசி இராச்சியமாக கண்டி அமைந்தமை இதற்குக் காரணமாகும். புத்த பெருமானின் புனித தந்தம் பாதுகாக்கப்படும் தலதாமாளிகை இங்கு அமைந்திருப்பதால் இந்நகரம் புனித நகரமாகக் கருதப்படுகிறது. வருடாவருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்று வருகின்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த எசல பெரேரா சர்வதேச ரீதியில் இந்நாட்டுக்கு புகழையும் வருமானத்தையும் தேடித்தருகிறது. பண்டைக் காலத்துக்குரிய ஆடையணிகள், நகைநட்டுக்கள் என்பன பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நூதனசாலையும் இங்குள்ளது. தலதாமாளிகைக்கு அருகிலமைந்துள்ள சிறுகடல் போல் விசாலமான தெப்பக்குளம் இந்நகரின் அழகுக்கு அழகூட்டுகிறது.

1. கண்டி மாநகரம் வரலாற்றுப் பெறுமதி மிக்கதாக அமைந்துள்ளமைக்கான காரணம் யாது?
............................................................

2. உலகளாவிய ரீதியில் கண்டி நகரம் புகழ்பெறக் காரணம் யாது?
............................................................

3. கண்டி நகரம் புனித நகராகக் கருதப்படுவதற்கான காரணம் யாது?
............................................................

4. எசல பெரஹெராவினால் வருமானம் கிடைப்பது எவ்வாறு?
............................................................

5. கண்டி நகரை ஆட்சி செய்த கடைசி மன்னன் யார்?
............................................................

6. கண்டி நகரைக் குறிக்கும் பழைய பெயர் யாது?
............................................................

7. பின்வரும் சொற்களுக்கான ஒத்த கருத்துச் சொற்களைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக

1. வரலாறு ................................ 2. பல்................................
3. தூய்மை................................ 4. புராதன ................................

8. பின்வரும் சொற்களுக்கான எதிர்கருத்துச் சொற்களை எழுதுக

1. இயற்கை ................................ 2. கடைசி ................................
3. விசாலமான ................................ 4. புராதன ................................

9. பந்தியிலிருந்து அடைமொழிச் சொற்கள் எழுதுக
................................ ................................

10. பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழிகள் இரண்டு எழுதுக
............................................................

11. பந்தியில் இடம் பெற்றுள்ள உவமைச் சொற்கள் இரண்டை எழுதுக
................................ ................................


12. பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்கான தமிழ்ச்சொற்களைப் பந்தியிலிருந்து தெரிந்து எழுதுக

1. city ................................ 2. month................................
3. Musium................................ 4. pond ................................

13. பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலப் பதத்தை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக
1. நட்சத்திரம் .......................................... 2. இரவு ..........................................

02. செவ்வக வடிவான காணியொன்றின் உரு பின்வருமாறு உள்ளது

45 M



01. இக்காணியின் அகலம் அதன் நீளத்தின் 1/3 பங்காகும் எனின் அதன் அகலம் யாது?
..................... மீற்றர்
02. காணியின் சுற்றளவைக் காண்க? ................. மீற்றர்

3. காணியின் 1/3 பங்கு நிலத்தில் பழப்பயிர் நாட்டப்பட்டுள்ளது எனின் பழப்பயிர் நாட்டப்பட்டுள்ள பரப்பளவு யாது?

4. இக் காணியைச் சுற்றி 5 மீற்றர்கள் ஒரு தூண் என்றவாறு வைப்பதற்கு எத்தனை தூண்கள் தேவைப்படும்?
..........................................................

5. இக் காணியைச் சுற்றிப் பாதுகாப்பிற்காக 3 வரிசைகளில் கம்பி அடிக்கப்பட வேண்டுமாயின் அதற்குத் தேவையான கம்பியின் மொத்த நீளம் என்ன? ........................... மீற்றர்

6. இக் காணியின் 10 அன்னாசிப்பயிர்கள் உள்ளன. ஒரு அன்னாசிப் பற்றைக்கு ஒரு தடவைக்கு 620 கிராம பசளை போடப்பட வேண்டுமாயின் ஒரு தடவைக்குத் தேவையான பசளையின் அளவைக் காண்க?
.......................... கிலோகிராம் ...................... கிராம்

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√) அடையாளத்தையும் பிழையாயின் (x) அடையாளத்தையும் அடைப்புக்குறிக்குள் இருக்கும் புள்ளிக்கோட்டில் இடுக.
1. தேசிய கொடியில் இருக்கும் அரச இலைகள் நான்கும் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் கோட்பாடுகள் ஒவ்வொன்றைக் குறிக்கும் (........)
2. அகத்தி மரத்தின் பூ மஞ்சள் நிறமாகும் (........)
3. உலகிலே மிகப்பெரிய தரை வாழ் விலங்கு யானை ஆகும். (.......)
4. தேக்கு மரத்தைக் கறையான் ஒருபோதும் அரிக்காது (.....)
5. வெட்டுக்கிளியின் இரத்தம் வெள்ளை நிறமாகும். (.......)
6. ஒரு நாளில் 24 மணி நேரமும் இயங்கும் நிறுவனங்கள் இலங்கையிலும் உள்ளன (......)
7. லுனுவில எனும் இடத்தில் தென்னை ஆராய்ச்சி நிலையம் உள்ளது (......)
8. பல்லி ஈருடகவாழிப் பிராணியாகும் (......)
9. வளி அதிர்வதனாலேயே ஒலி உண்டாகிறது (.....)
10. படை எனும் சொல் பெயராகவும் வினையாகவும் வரக் கூடியது (......)

04. சரியான விடையின் கீழ்க்கோடிடுக
1. செய்திப்பத்திரிகை ஒன்றில் பிரதானமான விடயமாக அடங்குவது எது?
1. சினிமா 2. விளையாட்டுத் தகவல்கள் 3. கதைகள் 4. உள்ளூர்வெளியூர் நடப்புக்கள்

2. வெற்றிலை மெல்லும் ஒருவர் வெற்றிலைச் சக்கையை வாயில் வைத்துக் கொண்டவாறு நித்திரை செய்வதானால் ஏற்படக்கூடிய பாதிப்பு யாது?
1. வாய்நாற்றம் 2. வாய்ப்புற்றுநோய் 3. பல்லவி 4. முரசுகரைதல்

3. மரத்தளபாடங்கள் செய்வதில் முன்னணியில் நிற்கும் நகரம் எது?
1. மொரட்டுவை 2. மாத்தளை 3. தம்புள்ளை 4. கொழும்பு

4. இலங்கையின் முதலாவது அதிவேக பெருந்தெரு எது?
1. கொழும்பு - காலி 2. கொழும்பு - மாத்தறை
3. கொழும்பு - கண்டி 4. கொழும்பு - ஹம்பாந்தோட்டை



5. அக்டோபர் 1ஆம் திகதி என்ன தினமாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது?
1. சர்வதேச சிறுவர் தினம் 2. சர்வதேச ஆசிரியர் தினம்
3. சர்வதேச தொழிலாளர் தினம் 4. சர்வதேச பெண்கள் தினம்
1. யூரிககாரின் 2.நீல்ஆம்ஸ்ரோங் 3. நியூற்றன் 4. மார்க்கோனி

6. இறந்தகால பன்மை முன்னிலை வினைமுற்று ஒன்று எது?
1. வந்தேன் 2. வந்தது 3. வந்தாய் 4. வந்தீர்கள்

7. விளையாடுதல் எனும் சொல் பின்வருவனவற்றுள் எதில் அடங்கும்
1. வினைச்சொல் 2. பெயர்ச்சொல் 3. எச்சம் 4. அடைமொழி

8. விண்வெளிக்கு முதலில் சென்ற வீரர் யார்?
1. யூரிக்காரின் 2. நீல்ஆம்ஸ்ரோங் 3. நியூற்றன் 4. மார்க்கோனி

9. குளுகுளு என்று காற்று வீசியது எனும் வாக்கியத்தில் காற்றின் தன்மையைக் குறிக்கும் கருத்து யாது?
1. வேகமான காற்று 2. இதமானகாற்று 3. குளிர்ந்தகாற்று 4. சூடானகாற்று

10. எமது நாட்டுக்கு மட்டுமே உரித்தான உயிரினம் யாது?
1. காங்காரு 2. சிங்கம் 3. பண்டாகரடி 4. மரஅணில்

11. உருவில் காட்டப்பட்டுள்ள பெரியவர் யார்?
1. சீ.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா
2. எஸ்.டபிள்யு.ஆர்.டீ.பண்டாரநாயக்க
3. டபிள்யு.தஹநாயக்க
4. கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி



12. பொருளொன்றின் நல்ல பகுதியைப் பிரித்துவிட்டு பதர்களையும் வேறு சிறு கழிவுகளையும் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் கருவி யாது?
1.சுளகு 2. மாவரி 3.தட்டு 4. பெட்டி

13. காணாமற் போன அடையாள அட்டையைப் பற்றி அறியக்கொடுப்பதற்கு செல்ல வேண்டிய இடம் எது?
1. கிராமசேவை அலுவலகம் 2. தபால் நிலையம்
3. பொலிஸ் நிலையம் 4. ஆட்பதிவுத்திணைக்களம்


14. எமக்கு வீட்டிலிருக்கின்ற போதே கிடைக்கின்ற சேவை எது?
1. கல்வி 2. சுகாதாரம் 3. போக்குவரத்து 4. தொலைபேசி

15. தேசப்படமொன்றில் பெருந்தெருக்களைக் குறித்துக் காட்டுவதற்கு பயன்படும் நிறம்
1. நீலம் 2. கருப்பு 3. கபிலம் 4. சிவப்பு

16. நிழல் பெறுவதற்காக நடப்படும் மரம் எது?
1. கத்தாப்பு 2. வாழை 3. முருங்கை 4. மகோகனி

17. பின்வரும் எவ் விதையிலிருந்து நல்லெண்ணெய் பெறப்படுகிறது?
1. எள்ளு 2. குண்டுமணி 3. இறப்பர் 4. ஆமணக்கு

05. பின்வரும் வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக
1. உருவில் தரப்பட்டுள்ள கடிகார முகப்பில் 20.25 மணியைக் குறித்துக் காட்டுக



# பண்பாடுசார் வரலாற்றுச் சான்றுகள் ஆவணப்படுத்துவது அவசியமானதாகும்

## பேராசிரியர் சிவநாதன் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

எமது கலை, கலாசார பண்பாட்டு தொல்லியல் மரபுரிமைச் சின்னங்கள் பேணிப்பாதுகாக்கப் படவேண்டும். எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளத்தக்க வகையில் அவற்றை ஆவணப் படுத்தவேண்டும். இந்த வகையில் பேராசிரியர் புஸ்பரட்ணம் எழுதிய இந்த நூல் எதிர்காலச் சந்ததிக்கு பயன்படத்தக்க சிறந்த ஆவண நூலாக விளங்குகின்றது.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன் குறிப்பிட்டார்.

பேராசிரியர் ப.புஸ்பரட்ணத்தின் வட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியலில் மரபுரிமைச் சின்னங்களும் என்ற ஆங்கில நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பேராசிரியர் தொடர்ந்து பேசுகையில் உலகளாவிய ரீதியில் அதிகளவில் வருமானம் தரும் துறை சுற்றுலாத்துறையாகும் அண்மைக்காலத்தில் யாழ்ப் பாணத்திலும் வளர்ச்சியடைந்து வரும் இத்துறை தொடர்பான வழிகாட்டி நூலாக மட்டுமன்றி ஆய்வு நூலாகவும் விளங்குகிறது.

எதிர்காலச் சந்ததியினருக்கு எமது பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்களை அறிமுகப்படுத்தி எமது கலை கலாசாரம் பண்பாட்டம்சங்களின் அருமை பெருமைகளைஎடுத்துச் சொல்வதற்கும் இந்நூல் பெரிதும் உதவுகிறது.

இன்று வடபகுதிக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இங்குள்ள கலாசார சின்னங் களைப் பார்வையிடுவதிலும் அவற்றின் வரலாற்று முக்கியத் துவத்தைத் தெரிந்து கொள் வதிலும் அதிக அக்கறை செலுத்து கின்றனர்.

இவற்றைக் கருத்தில் கொண்ட பேராசிரியர் புஸ்பரட்ணம் தனது நூலில் 280 கலாசார மரபுரிமைச் சின்னங்களை அவற்றின் வரலாற்றுப் பின்னணி கொண்டு விளக்கியிருப்பதுடன் அம்மரபுரிமைச் சின்னங்களுக்குரியதான புகைப்படங்களையும், அம் மரபுரிமைச் சின்னங்கள் காணப் படும் இடங்களை இலகுவாக அடையாளம் காண்பதற்குரிய வ்திவரைபடங்களையும் இணைத திருப்பது இந்நூலுக்குரிய சிறப்பம்சமாகும் என்றார். (10)




வாழ்க வளமுடன்

பெயர் :இ.சபிசனா
முகவரி: இல. 90.கச்சேரி
சுண்டுக்குளி , யாழ்ப்பாணம்.

அகவை 1 இல்
பல்லாண்டு காலம்
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..............................
முகவரி :- ..............................
பிறந்த ஆண்டு :- ..............................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்
..............................
பெற்றோர் கையொப்பம்


# பின்தங்கிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்'டிற்கு யாழ். எய்ட் ஆற்றி வரும் பங்களிப்பின் ஓர் அங்கமாக நேற்று முன்தினம் சிறந்த சமூக சேவையாளரும் கனடா வாழ் ஈழத்தமிழருமான திருமதி ஜானகி பால கிருஸ்ணனின் அனுசரணையில் போரினால் பாதிப்படைந்த திருமுறிகண்டி இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் நலிவுற்ற மாணவர்களுக்கு கற்றல் மேம்பாட்டிற்கான உதவிப் பொருட்கள் வழங்கப் பட்டன.

பாடசாலை பிரதி அதிபர் பாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். எய்ட் பணிப்பாளர் செ.கமலக் கண்ணன் திட்டப்பணிப்பாளர் வ.பார்த்தீபன் மற்றும் உறுப் பினர்கள் கலந்து உதவிப் பொருட்களை வழங்கி வைத்தனர். (90)

# கைத்தொலைபேசி திருத்தல் பயிற்சி நிறைவுக்கான சான்றிதழ்

(மானிப்பாய்)

'இதம்' நிறுவனத்தின் ஆதரவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் நடாத்தப்பட்ட கைத் தொலைபேசி திருத்தல் பயிற்சி நெறிக்கான சான்றிதழகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

'இதம்' நிறுவனத்தின் ஆதரவில் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் வலி. தென் மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினூடாக கைத் தொலைபேசி திருத்தல் பயிற்சி நெறி நடாத்தப்பட்டது.

3 மாதங்கள் கொண்ட இப் பயிற்சி நெறி முற்றிலும் இலவசமானது என்பதுடன், சுமார் 30 இளைஞர்கள் இப் பயிற்சிநெறி மூலம் பயன் பெற்றுள்ளனர்.

இதிலிருந்து 12 பேர் வரையில் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்கு மேலதிக 15 நாள் பயிற்சி வழங்கப்படுவதுடன் பயிற்சி நிறைவில் அவர்களின் சுயதொழில் வாய்ப்பிற்கு ஏதுவான வகையில் ஒவ்வொருவருக்கும் தலா இருபதாயிரம் பெறுமதியான உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

வலி.தென் மேற்கு சண்டிலிப் பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் உப தலைவர் எஸ்.ரொபின்சன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன், வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம் மேளனத்தின் தலைவர் எஸ்.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சம்மேளன பொருளாளர் அ.ஜெபநேசன், பயிற்சியளித்த வளவாளர் ஆர்.ஸ்ரீரங்கன், 'இதம்' நிறுவனத்தின் உத்தியோகத்தர் திருமதி ஷைலஜா உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டு பயிற்சியை நிறைவு செய்த இளைஞர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (48)

## பரிசளிப்பு விழா

(யாழ்.நிருபர்)

யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, கௌரவ விருந் தினர்களாக அருட்தந்தை ஜஸ்ரின் பி.ஞானப்பிரகாசம் சிறப்பு விருந்தினராக பாடசாலை பழைய மாணவரும் பொறியியலாளருமான மேர்னன் வேதநாயகம் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (33)

# சைவ சமய ஆசிரியர்களுக்கான தல யாத்திரைப்பயணம்

(மானிப்பாய்)

யாழ். கல்வி வலயத்திற்குட் பட்ட பாடசாலைகளில் சைவ நெறிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இந்தியாவின் பிரசித்தி பெற்ற தலங்களுக்கு தலயாத்திரை மேற்கொள் வதற்கு சந்தர்ப்பம் கிடைத் துள்ளது.

அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருத்தலங்களுக்குத் தல யாத்திரை செய்யத் திட்ட மிட்டிருப்பதால், தல யாத்திரை செய்ய விரும்பும் ஆசிரியர்கள் தங்கள் பெயர்களை யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளரினால் அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (10)





பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் எழுதிய "வட இலங்கையில் சுற்றுலாவும் தொல்லியல் மரபுரிமைச் சின்னங்களும்" நூல் வெளியீடு நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் நூலின் முதற்பிரதியை வவுனியா வளாக முதல்வர் அருள்வேளிடம் வழங்குவதையும், அங்கு அவர் உரை நிகழ்த்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் காணலாம். (படங்கள்: ஆர்.ராஜகுமார்)

# 100ஆவது பிறந்தநாள் கொண்டாடிய கிளி



அவுஸ்ரேலியாவுக்கு உட்பட்ட டாஸ் மானியா தீவில் உள்ள வனவிலங்குகள் சரணாலயத்தில் 100 வயதான ஒரு கிளி பராமரிக்கப்பட்டு வருகிறது. இதற்காக அந்தக் கிளிக்கு சரணாலய ஊழியர்கள் பிறந்தநாள் கொண்டாடினர். 100 என்ற வடிவத்தில் உருவாக்கப்பட்ட கேக்கில், மூன்று மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்து, அதை அந்த கிளிக்கு பரிசாக அளித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக, இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிச பெத்திடம் இருந்து அந்த கிளிக்கு வாழ்த்து செய்தி வந்துள்ளது. 100 வய தான கிளி பற்றி ஏற்கனவே ராணியிடம் சரணாலய நிர்வாகிகள் தெரிவித்து இருந்தனர்.

பொதுவாக, இந்த வகையைச் சேர்ந்த கிளிகள், வனத்தில் இருந்தால் 40 ஆண்டு களும், சரணாலயத்தில் பராமரிக்கப் பட்டால் 70 ஆண்டுகளும்தான் அதிக பட்சமாக வாழும். ஆனால், அதையும் தாண்டி, 100 ஆண்டுகளை பூர்த்தி செய் துள்ளது, இந்தக் கிளி.

# இந்திய மகாராஜா மருத்துவமனையில் 70ஆயிரம் எலிகளை அகற்ற நடவடிக்கை

## முதற்கட்டமாக 2500 எலிகள் பிடிக்கப்பட்டது

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள ஒரு அரசு மருத்துவமனையில் இருந்து ஆயிரக்கணக்கான எலிகளை அகற்றும் பணியில் கடந்த இரண்டு நாட்களாக 40-இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் ஈடுபட்டு வருவதுடன் அங்கு 70 ஆயிரத்துக்கும் மேற்பட்ட எலிகள் உள்ளதாகவும் தெரிவிக கப்படுகின்றது.

மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள பெரிய அரசு மருத்துவமனைகளுள் ஒன் றான மகாராஜா யஷ்வந்த்ராவ் மருத்துவ மனையில் ஆயிரக்கணக்கான எலிகள் உள்ளன. மருத்துவமனை வளாகத்தில் எலிகள் எண்ணிக்கையால் சுகாதார கேடு ஏற்பட்டதையடுத்து, எலிகளை முற்றிலு மாக ஒழிக்க பூச்சி கட்டுப்பாட்டு நிறுவனத் திடம் ரூ.55 இலட்சத்திற்கு ஒப்பந்தம் செய யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்த மருத்துவமனை வளாகத்தில் இருந்து சுமார் 2,500 எலிகள் அகற்றப்பட்டதாகவும், தற்போது மருத்துவ மனையின் மூன்றாவது மாடியில் எலிகள் பிடிக்கும் பணி நடைபெறுவதால் அந்த தளம் சீல் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இறால், சமோசா, விஷம் கலந்த நெய் போன்றவற்றை வைத்து எலிகளை பிடித் துவருவதாகவும், எலிகளை பிடித்தவுடன் வளைகளை அடைத்துவிடுவதாகவும் பணியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த எலி பிடிக்கும் பணி டிசம்பர் மாதம் 4 ஆம் திகதி முடியுமென எதிர் பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தீவிரவாத செயல்களை ஊக்குவிக்கக்கூடாது

## இன்ரபோல் கூட்டத்தில் பாக். மீது இந்தியா பாய்ச்சல்



எந்த ஒரு நாடும் தீவிரவாத செயற்பாடுகளை ஊக்குவிக்கக் கூடாது என்றும் தீவிரவாத பயிற்சி முகாம்கள் செயற்படுவதை அனு மதிக்கக் கூடாது என கூறி பாகிஸ தானை மறைமுகமாக இந்தியா குற்றம்சாட்டியுள்ளது.

சர்வதேச பொலிஸ் படையின (இன்டர்போல்) 83ஆவது பொதுச் சபைக் கூட்டம் மொனாகோவில் நடைபெற்றது.

• இந்தக் கூட்டத்தில் இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசியதாவது:

தீவிரவாத செயல்களை ஒருங் கிணைப்பது, தூண்டுவது, தீவிர வாதிகளுக்கு தேவையான வசதி களை செய்து கொடுப்பது, நிதியுதவி அளிப்பது, தீவிரவாத செயல்களை ஊக்குவிப்பது அல லது சகித்துக் கொள்வது ஆகிய செயல்களில் எந்த ஒரு நாடும் ஈடுபடக்கூடாது.

தீவிரவாத அமைப்புகளுக் கும் அவர்களின் சட்டவிரோத பணத்துக்கும் அடைக்கலம் கொடுப்பது, தீவிரவாதிகளின் சட்டவிரோத செயல்களுக்கு ஆதரவு அளிப்பது உள்ளிட்ட செயல் களில் ஈடுபடும் நாடுகளுக்கு எதி ராக இணைந்து செயற்பட வேண் டியதன் அவசியத்தை உலக நாடுகள் உணர வேண்டும்.

அமெரிக்காவில் நடைபெற்ற இரட்டைக்கோபுர தாக்குதலுக் குப் பிறகு, தீவிரவாதிகள் மீதான கண்ணோட்டத்தை வளர்ந்த நாடுகள் மாற்றிக் கொண்டன. ஆனால் இந்தியாவில் கடந்த 1980-களிலிருந்து தீவிரவாத சம் பவங்கள் தொடர்கின்றன. இதை கட்டுப்படுத்துவதற்கு கடலோரப் பகுதிகள் உட்பட நாடு முழுவ தும் கண்காணிப்பை தீவிரப் படுத்த வேண்டும். எந்த வகையி லும் ஊக்கமளிக்கக் கூடாது என தீவிரவாதிகளுக்கு ஆதரவளிக் கும் நாடுகளுக்கு உலக நாடுகள் கூட்டாக இணைந்து அழுத்தம் தர வேண்டும் என பிரிக்ஸ் மாநாட்டில் இந்திய பிரதமர் நரேந் திர மோடி சுட்டிக்காட்டியதை நினைவுகூர விரும்புகிறேன்.

மேலும் இணையத்தள வழி குற்றங்களைத் தடுப்பதற்கு தேவையான செயற் திட்டத்தை வலுப்படுத்த ஒவ்வொரு நாடும் இந்த நேரத்தில் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இதில் இந்தியா சார்பில் மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் சிபிஐ இயக் குநர் ரஞ்சித் சின்ஹா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அணுஆயுத பாதுகாப்புக்கு உலக நாடுகள் ஒத்துழைக்க வேண்டும்

## இந்தியா வலியுறுத்து

அணு ஆயுதங்கள் தீவிரவாத குழுக்களிடம் சிக்கும் அபாயம் உள்ளது என்பதை பரவலாக உலக நாடுகளே ஏற்கின்றன. எனவே இந்த ஆயுதங்களை பத்திரமாக பாதுகாத்து வைக்கும் பொறுப்பு அனைத்து நாடுகளுக் கும் உள்ளது என இந்தியா வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச அணுசக்தி முகா மையின் வருடாந்திர அறிக்கை மீது ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா சார்பில் ஐ.நா.வுக்கான இந்திய தூதரக செயலர் அபி ஷேக் சிங் கடந்த செவ்வாய்க் கிழமை தாக்கல் செய்த அறிக்கை வருமாறு:

அணு ஆயுதங்கள் அரசு சாரா குழுக்களிடம் சிக்கும் அபா யம் உள்ளது. இதை எப்பாடு பட்டாவது தடுக்கவேண்டும். அணு ஆயுத தீவிரவாதம் உரு வாகி இருப்பதை பலரும் உண்மை என ஏற்கின்றனர். இது சர்வதேச சமுதாயத்துக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும்.

அணு ஆயுத பாதுகாப்பை வலுப்படுத்தவும் இவை தீவிர வாதிகள் கையில் சிக்காமல் தடுக்கவும் அணு ஆயுத நாடுக ளின் பொறுப்பான நடவடிக்கை கள், சர்வதேச நாடுகளின் ஒத்து ழைப்பு மிகவும் அவசியம்.

அதிகரித்து வரும் தேவையை சமாளிக்க மின்சார உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயத் தில் இந்தியா உள்ளது. இதற்கு அணு மின்சார உற்பத்தியும் அவ சிய மாகிறது. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்

# ஒபாமாவுக்கு சிக்கலை ஏற்படுத்தும் அமெரிக்க பொதுத் தேர்தல் முடிவு




அமெரிக்காவில் கடந்த செவ் வாய்க்கிழமை நடைபெற்ற பொதுத் தேர்தலில், அதிபர் பராக் ஒபாமாவின், ஆளும் ஜனநாயக கட்சி படுதோல்வி அடைந்தது. நாடாளுமன்றத்தின் இரு சபை களான பிரதிநிதிகள் சபை மற் றும் செனட் சபையில், பெரும் பான்மை இடங்களில் குடியரசு கட்சி வேட்பாளர்களே வெற்றி பெற்றனர். இதனால், ஒபாமா வின் மிகுதியான இரண்டாண்டு பதவிக்காலம், அவருக்கு சோத னையான காலகட்டமாகவே இருக்கும் என கூறப்படுகிறது.

அமெரிக்காவில், கடந்த செவ் வாய்க்கிழமை பொதுத் தேர்தல் நடைபெற்றது. அதிக அதிகாரம் மிக்க, பிரதிநிதிகள் சபையின், 435 இடங்களுக்கும், 100 இடங் களை கொண்ட செனட் சபைக் கும், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை, மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற் கான, 36 இடங்களுக்கும், மொத்த முள்ள, 50 மாகாணங்களில், 36 மாகாணங்களுக்கும், மாநக ராட்சி, மாநகராட்சி உறுப்பினர் களுக்கும் தேர்தல் நடைபெற்றது.

நூறு உறுப்பினர்களை கொண்ட செனட் சபைக்கு நடைபெற்ற தேர்தலில், அமோக வெற்றி பெற்ற குடியரசு கட்சியினர், 52 இடங்களை கைப்பற்றினர் ஜன நாயக கட்சியினர், 43 இடங்களை மட்டுமே பெற்றனர்.

அது போல, 435 இடங்க ளைக் கொண்ட பிரதிநிதிகள் சபையில், குடியரசுக்கட்சியினர், 235இற்கும் அதிகமான இடங்களை பெற்றனர் ஆளும் ஜனநாயக கட்சியினர், 157இற்கு சற்று அதிக மான இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றனர். அந்நாட்டின் மொத்தமுள்ள, 50 மாகாணங் களின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஆளுநர்களுக்கான தேர் தல், 36 மாகாணங்களுக்கு நடை பெற்றது. இந்த தேர்தலிலும், எதிர்க்கட்சியான குடியரசு கட்சி வேட்பாளர்களே அதிக இடங்களை கைப்பற்றினர்.

நாடாளுமன்றில் இரு சபைக ளிலும், எதிர்க்கட்சியாக இருக் கும் குடியரசு கட்சியின் கை ஓங் கியுள்ளது, அதிபர் ஒபாமாவுக்கு சிக்கலை ஏற்படுத்தும் என, அந் நாட்டின் பிரபல பத்திரிகையான, "தி ஹில்" தெரிவித்துள்ளது. "அதி பர் ஒபாமா எடுக்கும் முக்கிய முடிவுகளுக்கு, நாடாளுமன்ற அனுமதி கிடைப்பது சிரமமே அதற்காக அவர், குடியரசு கட்சியி னரை அனுசரித்து தான் போக வேண்டும் அவரின் மிகுதியாக இருக்கும் இரண்டாண்டு பதவிக் காலம், அவருக்கு சிக்கலாகவே இருக்கும். மக்கள் புதிய கோணத்தில் நாட்டை வழி நடத்தியுள்ளனர்" என, தெரி வித்துள்ளது.

# எறிகணைத்தாக்குதல் உக்ரைனில் பதற்றம்

கிழக்கு உக்ரைனில் நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதலில் இரண்டு சிறார்கள் கொல்லப்பட்டதுடன், மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.

கிழக்கு பிராந்திய நகரான டொனெஸ்கில் உள்ள பாடசாலை ஒன்றை இலக்கு வைத்து இந்த தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்களால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிழக்கு உக்ரைனில் தேர்தல் நடாத்தப்பட்டிருந்தது.


இதனை அடுத்து கிளர்ச்சியாளர்களுக்கும், அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான உடன்படிக்கை முறிவடையும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்த நிலையிலேயே குறித்த தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் இரண்டு தரப்பும் பரஸ்பர குற்றச் சாட்டுகளை முன்வைத்து வருகின்றனர்.

# சரியான அரசியல் தலைமையை மக்கள் தெரிவு செய்யவேண்டும்

## முழுமையான அபிவிருத்தி அப்போது ஏற்படும்



சரியான அரசியல் தலைமையை மக்கள் தெரிவு செய்யும் போதுதான் அபிவிருத்தியை மட்டுமன்றி மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த முடியுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் அண்மையில் இடம்பெற்ற யாழ். பொதுமக்கள் பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்கள் கடந்த கால யுத்தத்தால் பல்வேறுபட்ட அழிவுகளுக்கு முகங் கொடுத்தும் இழபபுகளை சந்தித்தும் நிர்க்கதியான வாழ்விற்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மக்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் அரசின் கொள்கைத் திட்டங்களுக்கு அமைவாக பல்வேறுபட்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்பிரகாரம் வாழ்வின் எழுச்சி திட்டத்தின் ஊடாக நாடளாவிய ரீதியில் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதன் கீழான செயற்திட்டங்களும் எமது பகுதிகளிலும் பாரபட்சமின்றி முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில், இவ்வாறான அபிவிருத்திகளையும் செயற்திட்டங்களையும் விரும்பாத சுயலாப அரசியல்வாதிகள் தமது சுயலாபத்தைக் கருத்திற கொண்டு தாம் நடைமுறைப்படுத்தாமலும் நடைமுறைப்படுத்த விடாதும் தடுத்து வருகின்றனர்.

இருந்த போதிலும் கூட அரசுடனான எமது நல்லுறவு மற்றும் இணக்க அரசியல் ஊடாக எமது பகுதிகளின் அபிவிருத்தியை மட்டுமன்றி மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதாரத்தையும் மேம்படுத்தி வருகின்றோம்.

அந்தவகையில் மக்கள் மீதான அக்கறையையும் அபிவிருத் திகளை விரும்புவோர்களால் மட்டுமே இவ்வாறான செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியும் என்பதை கூறிவைக்க விரும்புகின்றேன்.

எனவே, எதிர்காலத்திலும் இவ்வாறான அபிவிருத்தி வாழ்வாதார மேம்பாட்டு செயற்றிட்டங்களை முன்னெடுக்கக் கூடிய வகையில் மக்கள் சரியான அரசியல் தலைமையை தெரிவு செய்ய வேண்டுமென்பதுடன், அதனூடாகவே இப்பேற்பட்ட மக்கள் நலன்சார்ந்த செயற்றிட்டங்களை முன்னெடுக்க முடியுமென்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் எமது மக்களின் நாளாந்த பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி அரசியல் உள்ளிட்ட உரிமைகளையும் எம்மால் வென்றெடுக்க முடியுமென்றும் தெரிவித்தார்.

### பகிரங்க...

விவாதத்திற்கு வருமாறு வடமாகாண முதலமைச்சரையும், அமைச்சர்களையும், அவைத் தலைவரையும் அழைப்பு விடுவதாக அவர் தனது அழைப்பில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் வட மாகாண சபையின் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் முதலமைச்சரும், அமைச்சர்களுமே. அவர்களே நிதிச் செலவீனம் தொடர்பான விடயங்களுக்கு பதில் அளிக்க வேண்டும். அவைத் தலைவர் சபை நடவடிக்கைகளுக்கே பொறுப்பானவர். இருந்தும் இவர்களில் ஒருவரை நேரடி விவாதத்திற்கு, தான் மீண்டும் அழைப்பதாக அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

### பெற்றோரை..

அவசியம் இல்லை என்று இலங்கை அரசாங்கம் கூறியுள்ளது.

எனினும் இந்திய வம்சாவழிகள் என்ற அடிப்படையில் இவர்களுக்கு உதவுவதற்கு இந்தியாவுக்கு கடப்பாடு உண்டு.

எனவே இலங்கை கோரியுள்ள அவசர உதவிகளை வழங்குதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

இந்தநிலையில் ஏற்கனவே இந்தியாவின் வீடமைப்பு திட்டங்களில் 2000 வீடுகள் பதுளைக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

இதில் சில வீடுகளை மீரியாபெத்தைக்கு வழங்க ஆலோசிக்கப்படுகிறது. அதிலும் மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கம் வீடுகளைக் கட்டித்தருவதாக உறுதியளித்துள்ளமையால் அதனைப்பொறுத்தும் தீர்மானங்கள் அமையும்.

இதனைத் தவிர பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு இந்தியாவில் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கல்வியைத் தொடர இந்தியா நிச்சயம் உதவியளிக்கும் என்றும் நடராஜன் குறிப்பிட்டார்.

### புலிகள்...

சஞ்ஜீவ் ஜெயின் தன்னுடைய வாதத்தில், விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இந்தியாவில் இன்னும் தொடர்ந்து வருகின்றன என்று உளவுத்துறையின் தகவல்கள் கிடைத்து வருகின்றன. இது இந்திய இறையாண்மைக்கும், அமைதிக்கும் ஊறு விளைவிப்பதாக அமையும். விடுதலைப்புலிகள் அமைப்பை சட்டவிரோத அமைப்பாக அறிவித்து அந்த அமைப்பின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக்கூடாது என்றார்.

தமிழக அரசு சார்பில் ஆஜரான வக்கீல் யோகேஷ் கன்னா தன்னுடைய வாதத்தில்,

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு ஆதரவாக இந்தியாவில் சில குழுக்கள் செயற்பட்டன. இதனால், அவற்றின் உறுப்பினர்கள் மீது சட்டவிரோத செயற்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2012, மே 14 முதல் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிலர் மீது வெடிமருந்து சட்டங்களின்படியும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

விடுதலைப்புலிகளுக்கு சாதகமாகவும், அவர்களின் தனி ஈழம் குறித்த கோரிக்கையை ஆதரித்தும் இணையத்தளம் மூலம் வெளிநாடுகளில் வாழும் இலங்கை தமிழர்கள் சிலர் பிரசாரம் செய்துவருகின்றனர். அவர்கள், இலங்கையில் விடுதலைப்புலிகளை வீழ்த்த இந்திய அரசே காரணம் என்றும் குறிப்பிட்டு வருகின்றனர்.

இத்தகைய பிரசாரங்களால் இந்தியாவில் உள்ள மிக முக்கிய பிரமுகர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. எனவே, பிரிவினையைத் தூண்டும் இதுபோன்ற குழுக்களை ஊக்குவிக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தொடர்ந்து சட்டவிரோத அமைப்பாக கருதி தடையை நீடிக்க வேண்டும் என்று அவர் வாதிட்டார்.

இறுதிக்கட்ட விசாரணைகள் முடிவடைந்த நிலையில் நேற்று முன்தினம் நீதிபதி ஜி.பி.மிட்டல் திகதி குறிப்பிடாமல் தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவு பிறப்பித்தார்.

### ஜனாதிபதித்...

கின்றதா என்பது தொடர்பிலான உயர்நீதிமன்றத்தின் வியாக் கியானத்தை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உயர்நீதி மன்றத் திடம் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் உயர்நீதி மன்றத்தின் பதிவாளர் எம்.எம். ஜயசேகர இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவருக்கு நேற்று முன்தினம் புதன் கிழமை கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இதன்படி சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயம் பற்றிய எழுத்து மூலமான தமது வாதத்தை இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3மணிக்கு முன்வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

### தரமான...

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் நேற்று ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவன உரிமையாளர்களை அமைச்சர் கொழும்பிலிருந்து தொலைபேசி வாயிலாக கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனங்களை நடத்திவரும் சுமார் 35 உரிமையாளர்கள் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்தில் அமைச்சருடன் கலந்துரையாடினார்கள்.

அவர்கள், கடந்த ஒருமாத காலத்துக்கும் மேலாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மற்றும் அவரது குழுவினரின் செயற்பாடுகள் காரணமாக தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் உரிமையாளர்கள், ஊழியர்கள் என சுமார் 2500பேர் நேரடியாகவும் கொள்வனவு செய்து விநியோகம் செய்யும் சுமார் பதினையாயிரத்துக்கும் மேற்பட்டவர்களும் தொழிலற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

சிறிய அளவிலான கைத்தொழில்போல் பல வருடங்களாக ஐஸ்கிறீம் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுவருவதாகவும் முறையான பிரதேச சபை, மாநகர சபை மற்றும் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் அனுமதியையும், சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டே தொழில் செய்து வந்துள்ளதாகவும், இதுவரை யாழ்.போதனா வைத்திய சாலையிலோ, பிரதேச வைத்திய சாலைகளிலோ ஐஸ்கிறீம் உண்டதால் நோயாளியாகி எவரும் மருத்துவம் பெற்றதாக நாம் அறிந்ததில்லை. எங்களது பிள்ளைகளும் இதையே சாப்பிடுகின்றார்கள். நாம் சுகாதாரத்துக்கு கேடாகவோ, முறையற்ற விதத்திலோ தொழில் செய்வதில்லை.

ஆனால் தற்போது எமது தொழில் நிறுவனங்களை பரிசோதிப்பவர்களாக வருகின்றவர்கள், யாழ்ப்பாண குடி தண்ணீரில் மலத்தொற்று உள்ளதாகவும் அதனால் வாந்திபேதி, வயிற்றோட்டம் ஆகிய நோய்களை உண்டு பண்ணக் கூடிய கிருமி உள்ளதாகவும் கூறுகின்றனர். அதனால் அந்த நீரைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் ஐஸ் கிறீமில் சுகாதாரக்கேடு இருப்பதாகக் கூறுகின்றனர். நாங்கள் தண்ணீரைச் சுட வைத்து பாவிப்பதாகவும், அல்லது உரியவாறு வடிகட்டிப் பாவிப்பதாகவும் கூறினால், தயாரிக்கும் இடம் சரியில்லை, சுகாதாரமான முறைமை இல்லை, குளிர்சாதனப் பெட்டி சரியில்லை, களஞ்சியப் படுத்தும்விதம் சரியில்லை, பாவிக்கும் மூலப் பொருட்களின் கரைசல்கள் சரியில்லை, ஊழியர்களுக்கு தங்குமிட வசதியில்லை, ஊழியர்களுக்கு மருத்துவ சான்றிதழ் வேண்டும் என்று எம்மை தொழிலைத் தொடரவிடாமலிருக்க காரணங்களைத் தேடித்தேடி முன்வைக்கின்றார்கள். இவற்றைப்பார்க்கும்போது தென் இலங்கையிலிருந்து ஐஸ் கிறீம் விநியோக உரிமத்தை பெற்றுக்கொண்டிருப்போருக்காக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்படுகின்றது.

நாம் சிறிய அளவிலேயே தொழில் செய்கின்றோம். அதற்குத் தேவையான நடைமுறைகளையே நடைமுறைப்படுத்துகின்றோம். அவற்றிலும்கூட நாம் பின்பற்ற வேண்டிய நடைமுறைகளையும், ஆலோசனைகளையும் எமது சூழலுக்கு ஏற்றவாறான வழிகாட்டலைவிடுத்தால் அதைப் பின்பற்றவும் தயாராகவே இருக்கின்றோம். ஆனால வருகின்ற அதிகாரிகளோ, எமது தொழிலை எவ்வாறெனினும் தடைசெய்யவேண்டுமென்ற முடிவோடு செயற்படுகின்றனர். இதனால் நாங்கள் பெரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளோம்.

இந்த நிலை தொடர்ந்தால் நாங்கள் குடும்பங்களோடு சாக வேண்டியதுதான் என்றும் கூறிய ஐஸ் கிறீம் உற்பத்தியாளர்கள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களாகிய தமது நிலைமையை புரிந்து பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் என்றவகையில் எங்களது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எம்மையும் தமது அமைச்சுக்குள் உள்வாங்கி, நெருக்கடிகளை அகற்றி தொழிலைத் தொடர உதவ வேண்டுமென ,கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# தொலைபேசி வாங்க வந்தவர்கள் வர்த்தகரை ஏமாற்றி கொள்ளை

(நெல்லியடி)

நெல்லியடி நகரப்பகுதியில் கைத்தொலைபேசி விற்பனை செய்யும்கடைஒன்றிற்கு கைத்தொலைபேசி வாங்க வந்த நான்கு நபர்கள் ஒரு கைத்தொலைபேசியை இலாவகமாக திருடிச் சென்றுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது

குறித்த நபர்கள் கைத்தொலைபேசி வாங்கவந்துள்ளோம் என கூறி கடைக்குள் நுழைந்த போது கடைக்காரர் ஓரிரு கைத்தொலைபேசிகளை மேசையில் வைத்து காண்பித்துள்ளார்.

அதில் ஒரு கைத்தொலைபேசியை வாங்கிவிட்டு அடையாள அட்டை பிரதியையும் கொடுத்துவிட்டு நல்லவர்களாக சென்றுள்ளனர்.பின்னர் கடைக்காரர்பார்த்தபோதே ஒரு கையடக்கத்தொலைபேசி களவாடப்பட்டமை தெரியவந்தது.

இச்சம்பவம் குறித்து கடைக்காரருக்கு அதிர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் கண்இமைக்கும் நேரத்தில் எப்படி திருட்டு இடம்பெற்றது என ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளார். அடையாள அட்டைக்குரியவர்கள் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. (18)

### கொஸ்லாந்தை...

ளர் சந்திப்பின் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மீரியபெத்தை மண்சரிவில் புதையுண்டவர்களில் 10 பேரின் சடலங்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் 28 பேர் காணாமல் போயுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படுவதோடு, உயிரிழந்தமைக்கான தெளிவான காரணங்கள் குறிப்பிடப்பட்டு மரணச் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

### பாம்பு...

தனக்கு சொந்தமான காணியில் கடந்த 28 ஆம் திகதி பயிர்களுக்கு பசளை இட்டுக்கொண்டிருந்த போது பாம்பு தீண்டியுள்ளது. உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

### முள்ளிக்குளத்தில்...

கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மன்னார் ஆயர் கூறுகையில், "மன்னாரில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் பல வருடங்களாக முள்ளிக்குளம் பகுதி உள்ளது. இதனால் அப்பகுதியில் வசித்த தமிழ் மக்கள் தொடர்ந்து அகதி வாழ்வு வாழ்கின்றனர்.

2012ஆம் ஆண்டில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவுடன் நாம் நடத்திய சந்திப்பின்போது இந்தப் பகுதியை கடற்படையினர் விடுவிப்பர் என அவர் எமக்கு உறுதியளித்தார். நாம் மீண்டும் அவரை இப்போது சந்தித்து மக்களின் மீள்குடியமர்வு குறித்து விரிவாக உரையாடினோம் என்று தெரிவித்தார்.

# டுபாயில் இருந்து கின்னியாவிற்கு கடத்தப்படவிருந்த சிகரட் பறிமுதல்



(கொழும்பு)

டுபாயிலிருந்து வரி செலுத்தாத நிலையில் இலங்கைக்கு கடத்தப்பட்ட சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரட்கள், காலணிகளை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

பயணிகளுடைய பொருட்கள் எனக் குறிப்பிடப்பட்டு இந்த நான்கு பெட்டிகளும் டுபாயில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன எனவும் இவை கிண்ணியா, அரநாயக்க மற்றும் வத்தளை பிரதேசங்களின் முகவரிகளுக்கு அனுப்பப்படவிருந்தன எனவும் சுங்கப் பேச்சாளர் லெஸ்லி காமினி குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை நேற்றுத் திறந்த போது மூன்று இலட்சத்து 47 ஆயிரத்து 200 சிகரட்டுகளும், 832 சோடி ஆண்களுக்கான காலணிகளும், இரண்டாயிரத்து 80 சோடி சிறுவர்களுக்கான காலணிகளும் இருந்தன எனவும் லெஸ்லி காமினி தெரிவித்தார்.

பறிமுதல் செய்யப்பட்ட சிகரட்டுகளின் பெறுமதி சுமார் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபா என மதிப்பிடப்படுகின்றது.

இதனால் அரசாங்கம் சுமார் இரண்டு கோடியே 10 இலட்சம் ரூபா வரியை இழக்க நேரிட்டது என் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறினார்.

# அம்பலவாணர் ஆலயத்தில் மீண்டும் திருட்டு

(தாவடி)

தாவடி, அம்பலவாணர் வேத விநாயகர் கோவிலில் நேற்று முன்தினம் இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கோவிலின் தெற்குப் பக்கமாக கதவை உடைத்து உள்ளே நுழைந்த திருடர்கள் அங்கிருந்த உண்டியலை உடைத்து அதற்குள் இருந்த பணம் மற்றும் கோவிலின் பித்தளையிலான குத்து விளக்குகள் போன்ற பெறுமதிமிக்க பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

காலையில் பூஜைக்காக வந்த பூசகர் உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதையும், பித்தளைப் பொருட்கள் களவாடப்பட்டிருப்பதையும் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இக்கோவிலில் முன்னரும் சில தடவைகள் களவு இடம் பெற்றுள்ளதுடன், உண்டியல் உடைக்கப்பட்டுப் பணம் களவாடப்பட்டதே அதிகமாகும்.

இதேவேளை, தாவடிப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் அங்குள்ள மக்கள் பெரும் அச்சத்துடனும், பதற்றத்துடனும் காணப்படுகின்றனர்.

திருடர்களின் நடமாட்டம் தென்படும் பட்சத்தில் அயலவர்களின் உதவியைப் பெறுவதற்காக அவர்களின் தொலைபேசி இலக்கங்களை இங்குள்ளவர்கள் பெற்று வைத்திருப்பது குறிப்பித்தக்கது. (137)

# உட்கட்டுமானம் நிறைவடைந்த பணிக்கு மீண்டும் வலி.வடக்கு பிரதேசபை அனுமதி

## உறுப்பினர்கள் விழிப்படைந்ததால் சபை நிதி பாதுகாக்கப்பட்டது

(வலி.வடக்கு)

வலி.வடக்கில் ஏற்கனவே புனரமைக்கப்பட்டு வேலை முடிவுற்று நிதி விடுவிப்புச் செய்யப்பட்ட உட்கட்டுமானத் திட்டத்திற்கு மீளவும் வலி.வடக்கு பிரதேசசபை புனரமைப்புப் பணி செய்ய அங்கீகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

மேற்படி விடயமாக சபையின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

மயான அபிவிருத்தி சபையின் நிதிப்பங்களிப்புடன் கட்டுவன் கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு உரிய சுற்றுமதில் அமைக்கும பணி கடந்த 8 மாதங்களுக்கு முன்னர் நிறைவடைந்துள்ளது.

இந்நிலையில் மீண்டும் மேற்படி தீர்மானத்தை தவிசாளர் சபையில் கொண்டு வந்து நிறைவேற்றியுள்ளார்.

பின்னர் மேற்படி உட்கட்டுமானத்தை முன்னெடுத்து 15 இலட்சம் ரூபா சபை நிதியை அபகரிக்க எடுத்த மோசடி முயற்சி எதிர்க்கட்சி உறுப்பினர் எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்து அம்பலமாகியுள்ளது.

மேற்படி விடயத்தை அடுத்த பொதுக்கூட்டத்தில் ஆராயப்பட்டு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக மேலிடத்திற்கு கொண்டு செல்ல சபை தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

# கல்வி முதுமாணி 11 ஆவது பிரிவு எதிர்வரும் 14 ஆம் திகதி ஆரம்பம்

## பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழக கல்வி முதுமுமாணி (M.ed) கற்கை நெறிக்காகத் தெரிவானவர்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பாக பட்டதாரிகள் படிப்பு நிலையத்தில் காலை 9.30 மணிக்கும் முற்பகல் 11.30 மணிக்கும் இடையில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக சமூகமளிக்கும் போது பதிவுக்கான படிவம், யாழ். பல்கலைக்கழகத்தின் மக்கள் வங்கியில் பணம் செலுத்தியதற்கான ரசீது, தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், பட்டதாரி பட்டப்பின் படிப்பு மற்றும் விபரங்களடங்கிய போட்டோப் பிரதிகள், தலைமை நிறுவனத்தின் சிபார்சுக் கடிதம், 2"x1 1/2" அளவிலான இரண்டு புகைப்படங்கள் ஆகியன எடுத்து வரப்பட வேணடும் எனவும் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு திருநெல்வேலி பலாலி வீதியில் உள்ள யாழ். பல்கலைக்கழக பட்டதாரிகள் நிலையத்தில் ஆரம்ப நிகழ்வு இடம் பெறும். அன்றைய தினமே முற்பகல் 10.00 மணிக்கு விரிவுரைகள் ஆரம்பமாகும் எனவும் பட்டப் படிப்புகள் பீடத்துக்கான பீடாதிபதி பேராசிரியர் எஸ். சத்தியசீலன் அறிவித்துள்ளார். (137)

# ஆளுநர் ஏற்பாட்டில் மும்மொழி கருத்தமர்வு

யாழ். கல்வியங்காடு டச்சு வீதியில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நடாத்தப்படும் மும்மொழிக் கற்கை நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள சிங்கள மற்றும் ஆங்கிலக் கற்கைப் பயிலரங்குகள் நாளையும், நாளை மறுதினமும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இடம்பெறவுள்ளன.

மும்மொழிக் கற்கை நிலைய இயக்குநர் லிலானி அமரசிங்க தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தொடக்கி வைப்பார். சிங்களக் கற்கைப் பயிலரங்கின் வளவாளர்களாக தேசிய கல்வி நிறுவகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் விராஜித் கமகே, பிலிமத்தலாவ ஆசிரிய மத்திய நிலைய முகாமையாளர் டபிள்யு கருணாதிலக்க, பதுளை மாவட்ட சிங்கள பாட ஆசிரியர் விஜயகாந்த் ஆகியோர் பங்குகொள்ளவுள்ளனர்.

ஆங்கில கற்கையின் வளவாளர்களாக யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்களான ம.பிரபாகரன், ச.முகுந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பயிலரங்கு எதிர்வரும் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களப் பரீட்சை ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (05)

# ஐரோப்பிய நாடுகளுக்கு மீன் ஏற்றுமதி நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முயற்சி

## அமைச்சர் ராஜித தகவல்



இலங்கையின் மீன்பிடித்துறைக்கு ஐரோப்பிய யூனியன் முன்வைத்துள்ள நிபந்தனைகளை, விதிக்கப்பட்டுள்ள காலக்கெடுவான ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்வோமென மீன்பிடித்துறை மற்றும் நீரியல்வள அமைச்சர் ராஜித்த சேனாரத்ன அண்மையில் தெரிவித்தார்.

நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட போதும் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை மீன்களுக்கு தடை விதிக்குமாக விருந்தால், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதாரத்தை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் சதி முயற்சியாகவே இதனை நோக்க வேண்டி வருமென்வும் அவர் கூறினார். இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கைக்கான 300 பக்க பதிலறிக்கை வெளிவிவகார அமைச்சுக்கூடாக அங்கு கையளிக்கப்பட்டுள்ளதெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இலங்கை மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டிருப்பதாக ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியாகியிருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், வழமைபோலவே மீன்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் மீன்பிடித்துறைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்குமிடையிலுமான தொழில்நுட்ப ரீதியான பிரச்சினையே இது. இதனை நுணுக்கமாக புரிந்து கொள்ளாமல் ஊடகங்கள் பிழையான செய்திகளை சித்தரிப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை மீன்பிடித்துறை 08 நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் கேட்டுக் கொண்டிருந்தது. இதில் 7 நிபந்தனைகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

வி.எம்.எஸ். இயந்திரக் கொள்வனவு மட்டுமே தற்போது பாக்கியுள்ளது. ஜனவரி 15ஆம் திகதி வரையில் எமக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் டிசம்பர் மாதத்திற்குள் நாம் அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்வோமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அனுப்பி வைத்துள்ள 300 பக்க அறிக்கையில் எமது அனைத்து அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நோக்கிற்காக மட்டும் இலங்கை மீது ஐரோப்பிய ஒன்றியம் தடைவிதிக்காமலிருந்தால், மீன் ஏற்றுமதியின் மூலம் இலங்கைக்கு கிடைக்கும் அந்நியச் செலாவணியை ஒரு பில்லியன் டொலருக்கு உயர்த்திக் காட்டுவேன் எனவும் அமைச்சர் கூறினார்.

# பண்பாட்டு பெருவிழா கிளிநொச்சியில்

கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டுப் பெருவிழா மிக விரைவில் நடாத்தப்படுவதற்கான ஒழுங்குகளை மாவட்ட பண்பாட்டுப் பேரவை ஆரம்பித்துள்ளது.

மாவட்டத்தின் தொன்மையைக் கூறும் நூல் ஒன்றும் பண்பாட்டு விழாவின் போது வெளியிடப்பட உள்ளது. வழமை போல மாவட்டத்தின் கலைத்துறைக்கு பங்களிப்புச் செய்த கலைஞர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர். பாரம்பரிய கலைகளுடன் கூடியதாக இந்த பண்பாட்டு விழா நடத்துவதற்குரிய துரித ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ரூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டு வருகிறார். (90)

# கற்பகதரு திட்டம் கிளிநொச்சியில் அமுல்

## பிள்ளைகள் யாவருக்கும் உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னை அபிவிருத்திச் சபையின் கற்பகதரு பரம்பரை திட்டத்தின் கீழ் இந்த ஆண்டு பிறந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் யாவருக்கும் அடுத்த வாரம் தலா 2 தென்னம்பிள்ளைகள் வீதம் வழங்கப்பட உள்ளது.

பொலித்தீன் பைகளில் அடைக்கப்பட்ட நிலையில் இலகுவாக எடுத்துச் செல்லக் கூடிய வகையில் இந்த தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட உள்ளது.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வணக்கஸ் தலங்கள் யாவற்றுக்கும் தலா 10 தென்னம்பிள்ளைகள் வீதம் இலவசமாக வழங்கப்பட உள்ளது.

இதனை வணக்கஸ் தல நிர்வாகிகள் தமது கடித தலைப்புக்களில் கடிதம் எழுதி சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.